Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-24 | 10-10-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -235

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247



# புதிய தலைமுறையின் ஒளிமயமான வாழ்வு பெண்கள் வாழ்வில் ஏற்படும் மாற்றத்திலேயே உள்ளது!

## தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு அரசியல்துறை மகளிர் பிரிவினர் அறிக்கை

மென்மேலும் சமூகத்தின் பெண்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அந்த மாற்றம் ஒருபுதிய தலைமுறையின் ஒளிமயமான எதிர் காலத்தில் தங்கியுள்ளது. என 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சிநாளையும் முன்னிட்டு தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:-

இன்று தமிழீழ பெண்களின் எழுச்சி நாள். தமிழ்ச் சமூகத்தின் சிந்தனையில் பெண் விடுதலை என்ற தீப்பொறியைப் பற்றவைத்த 2ஆம் லெப். மாலதி என்ற விடுதலை நெருப்பு வீரகாவியமான புனித நாள். ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்த்திக் கொள்ளக்கூடியளவு தமிழ்ச் சமூகத்தின் புரட்சியை நிலைநாட்டும் எழுச்சி நாள்.

மனித குல மேம்பாட்டை இலக்காகக் கொண்ட நவீன அறிவியல் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் இன்றைய உலகிலும் 'மனிதம்' மதிப்பளிக்கப்படாத மனிதர்களாக பெண்கள் வாழுகின்றார்கள் என்பது கசப்பான உண்மையாகவே உள்ளது. இது ஒரு சமூகத்தின் குறைபாடு. வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் சமூகத்திற்கான தடைக்கல். நீண்ட எமது வரலாற்றில் இன்னும் களைந்தெறியப்படவேண்டிய பக்கங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு வீடுகளின் இருண்ட அறைகளிலும்,

(02 ஆம் பக்கம் பார்க்க)

# -சர்வதேச நாடுகளிலும், மாநாடுகளிலும்- எம் தேசியத்தலைவர் காலடிவைக்கும் நாளே நம் இனம் இறைமை பெற்ற நாளாகும்!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

**எமது தலைவர் ஜெனீவா மாநாடு போன்றவற்றிற்கும் சர்வதேச நாடுகளுக்கும் காலடி எடுத்து வைக்கின்ற நாட்கள் தான் எங்களுடைய இனம் முழுக் கௌரவத்தையும், முழு நிம்மதியையும், முழுச் சுதந்திரத்தையும், முழு இறைமையையும் பெற்ற நாளாகும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

ஐ.பி.சி வானொலிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஜெனீவா மாநாடும், ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தையும் எமது விடுதலைப்புலிகள் அமைப்பினுடைய தலைமைப் பீடத்தினுடைய உறுதியான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்கு எமது மக்களுடைய அபிலாசைகளை சர்வதேச அளவில் முன் கொண்டு செல்லும் நோக்குடனும் ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் இ.நி.யோசனைகள் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும்

அரசாங்கம் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் நோர்வே தரப்பினரின் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தனர் இதனடிப்படையில் பேச்சு நடத்த ஐக்கிய தேசியக் கடசி உடன்பட்ட போதும் பின்னர் வந்த ஆட்சி மாற்றத்தினால் அது இடைநிறுத்தலுக்கு உள்ளானது .இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்பித்துள்ள யோசனைகளுக்கு பதில் யோசனையைச் சமர்பிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள் எழுச்சி நாளின் நிகழ்வில் பெருமளவான மக்கள் பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

2ஆம் லெப்ரினனட் மாலதியின் பதினேழாவது நினைவு நாளையும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும், சிறப்பிக்கும் முகமாக ஆரம்பமான எழுச்சி நாள் நிகழ்வு களின் 4ஆம் நாளான நேற்றுப் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்சார் ஊழியர்கள், அரச அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் எனப் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர்.



கலைநிகழ்வில்.

மேற்படி நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக காலை 9.00 மணிக்கு கிளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில்

## தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில் வைத்து நேற்று முற்பகல் 10.45 மணியளவில் தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். போராளி ஜுட் என்பவரே வீரச்சாவடைந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டை நடத்திய ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குறிப்பிட்ட சம்பவத்தின் போது, விடுதலைப் புலிகள் போராளி பயணம் செய்யவிருந்த தனியார் வாகனத்தின் சாரதியான எஸ்.நாகேஸ்வரன் (வயது 29) என்பவர் படுகாயமடைந்து அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். போராளி ஜுட் அக்கரைப்பற்று நகரில் வாகன உதிரிப்பாகங்களைச் கொள்வனவு செய்து விட்டு தம்பிலுவிலுள்ள தமது அரசியல்துறை அலுவலகத்திற்கு திரும்புவதற்காக தனியார் வாகனமொன்றில் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த சமயம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் மாலதி நினைவுத்தூபியில் இன்று சிறப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு

2 ஆம் லெப். மாலதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு தமிழீழமெங்கும் வெகுசிறப்பாக அனுஸ்டிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் அலங்கரிக்கப்பட்டு நினைவுத் தூபிகளும் திருவுருவப் படங்களும் அமைந்துள்ள இடங்களில் சிரமதானப்பணி மூலம் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளதோடு யாழ்.மாவட்டத்தில் இந்நாளினை வெகுசிறப்பாக அனுஸ்டிக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் பொலிஸ்-பொதுமக்கள் மோதல் இருபொலிசார் காயம்; 15பேர்வரையில் கைது

### நகரில் பொலிஸ் குவிப்பு, நகர் வெறிச்சோடியது

யாழ். நகரில் நேற்றிரவு சிறிலங்காப் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் இரு பொலிசார் உட்பட பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதி யில் கலவரமடக்கும் சிறிலங்காப் பொலிசார் குவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் வெறிச்சோடியது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது யாழ். நகர்ப்பகுதியில் நேற்றிரவு 8.00 மணியளவில் பொலிசாருக்கும்,பொதுமக்களுக்குமிடையே பெரும் கைகலப்பு இடம் பெற்றுள்ளது.

யாழ். நகரின் கஸ்தூரியார் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை சாதாரண உடையில் மது போதையில் நின்ற சில பொலிசார் வழிமறித்து லஞ்சம் கேட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் இலக்கியப் பெருவிழா நிகழ்வுகள் யாழ்.இல் நேற்று விமரிசையாக ஆரம்பம்

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டினில் " தமிழ்



இலக்கியப்பெருவிழாக் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். இந்துமகளிர் கல்லூரி பொது மண்டபத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான முதலாம் நிகழ்விற்கு வட- கிழக்கு மாகாண சபையின் மாகாண கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தலைமை தாங்கினார்.

முன்னதாக விருந்தினர்கள் நுழைவாயிலில் வைத்து மாலை அணிவிக்கப்பட்டு, இன்னிசை வாத்திய இசையுடன் ஊர்வலமாக நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கினை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு,உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கோகிலா மகேந்திரன்,யாழ்.வலயப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வலிகாமம் வலயப் பணிப்பாளர் திருமதி றெஜி இருதயநாதன், விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், வட-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ. விசாகலிங்கம், யாழ்.மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம். கலாநிதி க.சொக்கன் ஆகியோர் ஏற்றினர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவர்களது தமிழ்த்தாய் வாழ்த்தினையடுத்து தமிழ்தாய் உருவப் படத்திற்கு பேராசிரியர் சி.மௌனகுரு மாலை அணிவித்தார். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ்ஜின் வரவேற்புரையினையடுத்து விசேடமாக அமைக்கப்பட்டிருந்த உள்ளூர் நூல்களது கண்காட்சியினை கலாநிதி க.சொக்கன் நடாவை வெட்டி வைபவ ரீதியாகத்திறந்து வைத்தார்.

இதையடுத்து ஆய்வுரைகள் பல வாசிக்கப்பட்டதுடன், பட்டிமன்றம், நாட்டுக்கூத்து உள்ளிட்டகலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இன்றும், நாளையும் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ,பேராசிரியர் கா.சிவத்தம்பி,வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராசா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

அத்துடன் பேராசிரியர் கா. சிவத்தம்பி பற்றிய ஆவண ஒளிப்பேழை ஒன்றும்வெளியிட்டுவைக் கப்படவுள்ளது. (27)

# தொழில்சார் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்பெற்ற தொழில்சார் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிறுவனப் பணிப்பாளர் செபஸ்ரியான் செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களும், விருந்தினர்களும் சந்திரன் பூங்காவிலிருந்து மங்கல இசையுடன் ஊர்வலமாகப் பண்பாட்டு மண்டபத்திற்கு அழைத்துவரப் பெற்றனர்.

நிகழ்வின் மங்கல விளக்கினை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி மாவட்ட உதவிஅரச அதிபர் தலைமைப்பீடம் செல்வி ஜெயராணி, கிளி.மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணைத்தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றிவைக்க,



தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரேற்றல் வரவேற்பு நடனத்தினைத் தொடர்ந்து வரவேற்புரையினை நிறுவனத் தலைவர் ஏ.வி.கே. மாணிக்கம் நிகழ்த்தினார். சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன்,ஆசிய அபிவிருத்தி உறவுப்பால நிறுவனத் திட்ட முகாமையாளர் ரி.ஒக்ஸி, தமிழீழ காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன், தமிழீழ நிர்வாகசேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், யுனிசெப் நிறுவனப் பிரதிநிதி பெனிபுரூவ், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர் வழங்கினர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டு பயிற்சியினை நிறைவுசெய்த மாணவர்களைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# வவுனியா தெற்கு வலய ஆசிரியர் தின நிகழ்வு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்வி வலய உலக ஆசிரியர் தின நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளன.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ள இந் நிகழ்விற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி பி.ஆர்.ஏ ஒஸ்வேல்ட் தலைமை தாங்குவார் இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வவுனியா மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வன்னிமாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் சு.ஞானம், வவுனியா, மன்னார் யுனிசெப் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஜனாப் ஹமிட் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந் நிகழ்வில் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி பி.ஆர்.ஏ ஒஸ்வேல்ட் அழைப்பு விடுத்துள்ளார். (10)

## எம் தேசியத்தலைவர்...

ஜெனீவா மாநகரிலே நடைபெற்ற அரசியல் அமைப்பு விவகாரக் குழுவினுடைய கலந்துரையாடலும் ,மாநாடும் மிகவும் முக்கியமானதாகவும், பெறுமதி வாய்ந்ததாகவும் இருந்தது. அத்துடன் வடகிழக்கிற்கான மனித உரிமை செயலகம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அதனுடைய குழுவும் இங்கு வருகை தந்து சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், சர்வதேச அளவில் மனிதஉரிமை செயற்பாடுகளில் பிரபல்யமான நிபுணர்கள் வந்து அக்குழுவுடன் கலந்துரையாடியமை இங்கே மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அத்துடன் சுவிஸ் நாட்டினுடைய வெளிவிவ கார அமைச்சர் எங்களை நேற்றுச் சந்தித்து எங்களுடைய நிலைப்பாடுகளை அறிந்துசென்றுள்ளனர்.

இதேவேளை மனிதவுரிமை அமைப்புக்கள் , சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய உயர்மட்டப் பிரதிநிதிகள், நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர், நோர்வே விசேட தூதுவர் எனப் பல்வேறு பட்ட மிக முக்கிய அரசியல் உயர்மட்ட சந்திப்புக்கள் இடம்பெற்றன. அத்துடன் எங்களுடைய மாநாடும் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவும். அதாவது முக்கியமான ஒரு காலகட்டத்திலேயே எங்களுடைய தலைமைப்பீடத்தினுடைய பணிப்பிற்கு இணங்க நாங்கள் தற்போது அரசியல் அரங்கிலே எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற சவால்களுக்கு முகம் கொடுக்கின்ற உத்திகள் பற்றி நாங்கள் நிறையக் கலந்துரையாடியுள்ளோம். இது பற்றி எமது தலைமைப்பீடத்தினுடைய கரிசனைகள் பற்றியும். நிலைப்பாடுகள் பற்றியும் இங்கே முன்வைத்திருந்தோம். அவர்கள் தங்களுடைய பல கருத்துக்களைத் தந்துள்ளனர். இவற்றை நாங்கள் மிகவிரைவில் எமது தலைமைப் பீடத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளோம். நிச்சயமாக இச் சந்திப்புக்கள் சர்வதேச அளவிலும் சரி எங்களுடைய மக்களின் மனங்களிலும் சரி ஓர் மாற்றத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும் நிச்சயமாக ஏற்படுத்தும் என்பதில் நாங்கள் நம்பிக்கை பெற்றுள்ளோம்.

ஏனெனில் சர்வதேச அளவில் இன்று சந்திரிகாவும் கதிர்காமரும் மீண்டும் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தும் நோக்கோடு தமிழ் மக்களுடைய அபிலாசைகள், நிலைப்பாடுகள் புலிகளின் தலைமையின் உறுதிப்பாடுகள் சம்பந்தமாகவும் தவறான ஓர் உண்மைக்கு மாறான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்ற நேரத்திலே நாங்கள் மாநாட்டையும் எமது பயணத்தையும் தொடங்கியுள்ளமை சர்வதேச அளவில் எங்கள் மீதான உண்மையான மதிப்பீட்டையும், நிலைப்பாட்டையும் அவர்கள் அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். தேசியத் தலைவருடைய காலத்திலேயே எமது இனம் மீண்டும் ஓர் புத்தெழுச்சியைப் பெற்றுள்ளது. நாங்கள் எல்லோரும் எங்களுடைய தலைவருடைய காலத்திலே ஒன்று பட்டு இருக்கின்றோம். அவருடைய காலத்திலே எங்களுடைய இனம் எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். நாங்கள் நிம்மதியாக எங்களுடைய தாயகத்திலே முழுக் கௌரவத்தோடும், சுதந்திரத்தோடும் சகல உரிமைகளோடும் வாழ்கின்ற அந்தச் சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு புலம்பெயர் நாடுகளிலே இருக்கின்ற் தமிழ் மக்கள் அனேகம் ஒன்று பட்டு ஒரு தலைமையின் கீழ் அணி திரண்டு எமது விடுதலைப் போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எமது எல்லோரதும் எதிர்பார்ப்பாகும். எமது தேசியத் தலைவருடைய காலத்திலே நாங்களே வருகை தந்தாலும் எமது தலைவர் ஜெனீவா மாநாடு போன்றவற்றிற்கும் சர்வதேச நாடுகளுக்கும் காலடி எடுத்து வைக்கின்ற நாட்கள் தான் எங்களுடைய இனம் முழுக் கௌர வத்தையும், முழு நிம்மதியையும், முழுச் சுதந்திரத்தையும், முழு இறைமையையும் பெற்ற நாட்க ளாக இருக்கும். அந்த நாட்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் அதற்கு ஏற்ற வகையில் எங்களுடைய புலம் பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒன்று பட்டு ஒரு அணியின் கீழ், ஒரு தலைமையின் கீழ் இன்றைக்கு நீங்கள் ஒன்றுபட்டுள்ளீர்கள். அதனை இன்னும் வலுப்படுத்தி இனிவரப்போகின்ற எதிர்கால சவால்களுக்கும் நாங்கள் உறுதியோடும், துணிச்சலோடும் எதிர்கொண்டு எங்களுடைய இனம் வீறுநடைபோடவேண்டும். எமது மக்கள் அனைவரும் நாங்கள் இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தை ஒரு போதும் தவற விடாது அனைவரும் ஒன்றுபட்டு எங்களுடைய விடுதலையையும் எதிர்காலத்தையும், நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனையே நாங்கள் உங்கள் அனைவரிடமும் இருந்து எதிர்பார்க்கின்ற பங்களிப்பாக இருக்குமென நினைக்கின்றேன்.

## புதிய...

வேலைத்தளங்களிலும் நாளாந்த கூலிகளாய் வெயிலில் எரிந்தபடி நிற்கும் வயற்புறங்களிலும் என இன்னும் எங்கெல்லாம் பெண்கள் தம் வாழ்வுக்காய் போராடுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களின் துயர் கவிழ்ந்த வாழ்வே தொடர்கிறது.


ஒரு சமூகத்தின் வளர்ச்சி ஆண், பெண் முன்னேற்றத்திலேயே தங்கி நிற்கின்றது என்ற யதார்த்தத்தினைப் புறந்தள்ளி, பெண்கள் மீது விதிக்கப்படுகின்ற தளைகள் எவ்வாறு ஒரு ஆரோக்கியமான சமூகத்தின் தலைமுறையைத் தோற்றுவிக்கும் என்பது எல்லோரும் உணரப்பட வேண்டிய உண்மை. இதனை வெளித்தெரியும் தோற்றப்பாடுகளை மாற்றிப்பயனில்லை. இது ஒரு சமூக விழிப்புணர்வு, கல்வி,பொருளாதாரம் என்பவற்றுக்கு அப்பால் எம்மனங்களில் எங்கள் எதிர்கால நம்பிக்கையில் இதன் மாற்றம் பதியப்பட வேண்டும். எமது சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானங்களில் இதன் மாற்றம் துலங்க வேண்டும்.

எமது தாயகத்திற்கான விடுதலைப்போராட்டம் இந்த மாற்றத்தினைப் படிப்படியாக வெளிக்கொணர்ந்திருக்கிறது. எமது தேசியத்தலைவரின் சிந்தனையும் அவரது வழிகாட்டலும் எமது வாழ்வியலில் பாரிய மாற்றத்தினை விதைத்திருக்கின்றது. இதன்மூலம் வரலாறு காணாத பெண்களின் புதிய பக்கம் ஒன்று எம்முன்னால் விரிந்து நிற்கிறது. அந்தப் புதிய ஒளியானது எல்லோரையும் ஆச்சரியப்படவைக்கின்ற செய்திகளை எடுத்துக் கூறியது. 'முடியாது' என்ற வார்த்தைகள் மூடப்பட்டு முடியும் என்ற அர்த்தம் பொதிந்த வரலாற்றிலிருந்து பெண்களின் வீரவரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திலிருந்து பின்னோக்கிப் பார்க்கின்றபோது இம்மாற்றம் வியப்படைய வைப்பதாயினும் சமூகத்தில் எமது விடுதலைக்கான தடைகள் நிறையவே இருக்கின்றன. அவை சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும் வேறுபட்ட தன்மையினதாய் இறுகப்பற்றியுள்ளன. கிராமங்களில், நகர்ப்புறங்களில் என்று அனைத்து சமூகத்திலும் தளைகள் சூழ்ந்த பெண்களின் வாழ்வின் இருண்ட பக்கங்கள் உள்ளன.

இன்னும் மேன்மேலும் சமூகத்தின் பெண்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அந்த மாற்றம் ஒரு புதிய தலைமுறையின் ஒளிமயமான எதிர் காலத்தில் தங்கியுள்ளது. உடற்கூற்றியலுக்கு அப்பால் மானிடவாழ்வின் ஆழமான செயற்பாடுகளில் இம்மாற்றம் தங்கியுள்ளது. இதனை எமது விடுதலைப் போராட்டம் சாத்தியமாக்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் சமூகத்தின் மத்தியில் பற்றிப்படர்ந்துள்ளது. இந்தப் புரட்சிகரமான மாற்றங்கள் உருவாகுவதற்கான புறச்சூழலும் மிகவும் முக்கியமானது. அதனை நிவர்த்தி செய்வதாக விடுதலைப் புலிப்பெண் போராளிகளின் அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் அமைந்துள்ளன. எனவே இந்த முன் மாதிரிகளை தமிழ்ச் சமூகம் பின்பற்றி பழமைவாத இருட்டுலகில் இருந்து வெளியே வந்து தன்னம்பிக்கையுடன் தனித்து தீர்மானம் எடுக்கின்ற ஆளுமையுடன் மிளிர வேண்டும். மாலதி பற்ற வைத்த தீப்பொறி பெரு நெருப்பாகி தமிழ்ச் சமூகப் பெண்களைப் பற்றியிருந்த தளைகளை எரித்துச் சாம்பலாக்கி அவர்களின் அறிவு வளர்ச்சியை சுடரச் செய்யும். அதற்கான வேலைத்திட்டங்களே எம் சமூகப் பெண்கள் மத்தியில் முன்னெடுக்கப்படவேண்டும்.

கிராம,பிரதேச, மாவட்ட ரீதியாக செயற்படும் மகளிர் அமைப்புக்கள் பலம்பெற வேண்டும். கிராமத்தின், பிரதேசத்தின், மாவட்டத்தின், தேசத்தின் அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கின்ற முக்கிய சக்தியாக அவை வெளிப்படவேண்டும். எனவே பெண்கள் தமது அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்வதுடன் அந்த ஆளுமையை சமூகத்திற்கும் விரிவாக்கம் செய்யவேண்டும் என்பதே மிக முக்கியமான அம்சம். இதனையே இந்த தமிழீழ பெண்கள் நாளின் எழுச்சிப் பிரகடனமாக வரித்துக் கொள்வோம்.

# சதாம் விடயத்தில் உளவுத்துறை கூறியது பொய்
# முதல் முறையாக ஒப்புக் கொண்டார் புஷ்



**(வோஷிங்டன்)**

**ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க உளவுத்துறை அளித்த தகவல் தவறானது என்பதை முதன் முறையாக சனாதிபதி புஷ் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனாலும் ஈராக் மீதான போர் சரியானதே என்று நியாயப்படுத்தியுள்ளார்.**

ஈராக்கில் பேரழிவுஆயுதங்கள் இருக்கின்றனவா? என்பதைக் கண்டறிய அனுப்பப்பட்ட அமெரிக்க ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சார்லஸ் டியூல்பர், தனது இறுதி அறிக்கையை கடந்த வியாழன் சமர்ப்பித்தார். அதில் கடந்த 1991ஆம் ஆண்டு நடந்த போரில் தோல்வியடைந்தவுடனே, பெரும்பாலான இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை சதாம் ஹுசைன் அழித்து விட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட சில மணி நேரங்களில், தேர்தல் பிரச்சாரத்திற்கு கிளம்பும் முன்னர் சனாதிபதி புஷ் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது ;

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் பதுக்கி வைக்கப் பட்டிருப்பதாக அமெரிக்க உளவுத் துறை அழித்த தகவல் தவறானது என்று தெரிய வந்துள்ளது. ஆனாலும் உளவுத்துறையில் இந்தத் தவறு எப்படி நடந்தது என்பது குறித்து நாம் கண்டு பிடிக்க வேண்டும்.

இருப்பினும் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கை சரியானதே என்று உறுதியாக நான் நம்புகிறேன். சதாம் ஹுசைன் சிறையில் இருப்பதால் தான் அமெரிக்கா பாதுகாப்பாக இருக்கிறது.

ஆனாலும் அந்த சர்வாதிகாரி சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் எண்ணத்துடன்தான் இருந்து வந்தார். அது மட்டுமல்லாமல் அவற்றை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை அமெரிக்காவுக்கு எதிராக செயற்படும் தீவிரவாதிகளுக்குக்கூட கொடுத்திருக்கலாம். அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு தனிப்பட்ட அச்சுறுத்தல் சதாம் ஹுசைன் மட்டுமே. அவர் நமது பரமவிரோதியும் கூட. உலகின் பல பகுதிகளில நடக்கும் தீவிரவாதத்திற்கு ஆதரவு தந்தவர். செப்ரெம்பர் 11இற்குப் பிறகு உலகிலேயே நமக்கு அச்சுறுத்தல் அளிப்பவராக அவர் மட்டுமே இருந்தார். அதனால் அவர்மீது தாக்குதல் நடத்தவேண்டியிருந்தது. இன்று அமெரிக்காவும், உலகமும் பாதுகாப்புடன் இருப்பதற்கு நமது இராணுவ நடவடிக்கையே காரணம். இவ்வாறு அறிக்கையில் கூறியிருந்தார்.




ஆப்கானில் வாக்குச்சாவடி அதிகாரி வாக்களிக்க வந்தவர்களிற்கு மையினால் அடையாளமிடுவதையும் ; ஆப்கான் பெண் ஒருவர் பர்தா (முக்காடு) அணிந்தபடி வாக்களிப்பதையும் காணலாம்.

# ஆன்-லைன் மூலமாக வங்கியிலிருந்து ரூ.41 இலட்சம் திருடிய மாணவர் கைது

(பீஜிங்)

சீனாவின் மிகப் பெரிய பொதுத்துறை வங்கியின் கணக்கிலிருந்து ரூபா 41.85 இலட்சத்தை ஆன்-லைன் மூலமாகத் திருடியதாகக் கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டார். 8மாதங்களுக்கு முன்பு நடைபெற்றது இத் திருட்டு. சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள குய்ஜோவ் மாகாணத்தின் தலைநகர் குயாங்கைச் சேர்ந்தவர் கல்லூரி மாணவர் சாங்செங்கிலிங் (வயது 23) .இவர் இந்த ஆண்டு தொடக்கத்தில் சீன தொழில் மற்றும் வர்த்தக வங்கியில் போலி அடையாள அட்டையைக் காண்பித்து கணக்கைத் தொடங்கியுள்ளார். பின்னர் சீனாவின் வட கிழக்கே உள்ள ஹார்பின் நகரில் உள்ள இன்டர்நெட் மையத்திலிருந்து வங்கியின் 158 பேருடைய கணக்கைப் பார்த்துள்ளார். அதை பின்னர் தனது கல்லூரி நண்பரிடம் கூறியுள்ளார். பின்னர் இருவரும் இணைந்து அக் கணக்குகளில் இருந்த பணத்தை தங்களுடைய கணக்கிற்கு மாற்றிக் கொண்டுள்ளனர். மேலும் இரண்டு நண்பர்களிடம் இதை சாங் கூறியுள்ளார். நால்வரும் சேர்ந்து மொத்தம் ரூ.41.85 இலட்சத்தை வங்கியின் ஆன்.லைன் மூலமாகத் திருடியுள்ளனர். இதில் ஒரு பகுதியை சாங் எடுத்துக் கொண்டார். மீதமுள்ளதை மற்ற மூவரும் பகிர்ந்து கொண்டனர். தற்போது சாங் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.



கனோயில் நடைபெற்ற ஆசிய ஐரோப்பியக் கூட்டத்தில் ஒஸ்ரியன் பிரதமர் வூல்காங் சுசெல் (வலது), சீனப்பிரதமர் வென்ஜியா பாவோவுடன் உரையாடுகின்றார்.

# ஈராக்கில் தொடரும் தீவிரவாதிகளின் கொடூரம் இங்கிலாந்து பணயக்கைதியின் தலை துண்டிப்பு

(டுபாய்)

இங்கிலாந்து பணயக்கைதியை ஈராக்கில் தீவிரவாதிகள் தலையைத் துண்டித்து கொலை செய்துள்ளனர்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் கென்னர் பிக்லே. இவரையும் மெரிக்காவைச் சேர்ந்த ஹிஜின் ஆம்ஸ்ட்ராங் (வயது 52), ஜேக் ஹென்ஸ்லி (வயது 48) ஆகியோரையும் ஈராக் தீவிர வாதிகள் கடந்த மாதம் (செப்ரெம்பர்) 16ஆம் திகதி கடத்திச் சென்றனர். இவர்களில் ஹிஜின் ஆம்ஸ்ட்ராங், ஜேக் ஹென்ஸ்லி ஆகியோரை கடந்த சில நாட்களுக்கு முன்பு தீவிர வாதிகள் தலையைத் துண்டித்துக் கொலை செய்திருந்தனர் இந்த நிலையில் தற்போது இங்கிலாந்து பணயக்கைதி கென்னத் பிக்லேயின் தலையைத்துண்டித்து கொலை செய்துள்ளனர். இந்தக் கொடூர காட்சியை 'வீடியோ' வில் தீவிர வாதிகள் பதிவு செய்துள்ளனர். இந்த வீடியோவைப் பார்த்த ஒருவர் கென்னத் பிக்லே கொலை செய்யப்பட்டதைத் தெரிவித்தார். கென்னத் பிக்லே கொல்லப்பட்டதை அவருடைய சகோதரர் பில்பிக்லேயும் மற்றும் இங்கிலாந்து அரசும் உறுதி செய்தது. இங்கிலாந்து பணயக்கைதி கொல்லப்பட்ட சம்பவத்திற்கு இங்கிலாந்து வெளியுறவுத்துறை செயலாளர் ஜேக்ஸ்டிரா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீருக்கு மாநில சுயாட்சி கோரிக்கையை கைவிடவில்லை தேசிய மாநாட்டுக் கட்சி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்திற்கு சுயாட்சி அதிகாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் கைவிடவில்லை என்று தேசிய மாநாட்டுக் கட்சி கூறியுள்ளது. ஸ்ரீநகரில் இக்கட்சியின் தலைவர் உமர் அப்துல்லா கூறுகையில், காஷ்மீர் மாநிலத்திற்கு சுயாட்சி அதிகாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் உயிருடனே உள்ளது. ஆனால் ,மத்தியில் ஐ.மு.கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின்பு,காஷ்மீருக்கு சுயாட்சி அதிகாரம் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதில் அக்கறை காட்டவில்லை.இது எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது .இவ்விஷயத்தில் ஏற்கனவே செய்த தவறுகளை மத்திய அரசு மீண்டும் செய்யாது என்று நம்புகிறோம் என்றார்.

# நெருங்கி வரும் அமெரிக்க சனாதிபதித் தேர்தல்; ஜோர்ஜ்புஷ் , ஜோன் ஹெரி தீவிர பிரச்சாரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதனால் அமெரிக்காவில் தேர்தல் பிரச்சாரம் உச்சக் கட்டத்தையடைந்துள்ளது. குடியரசுக் கட்சி வேட்பாளரும் தற்போதைய சனாதிபதியுமாகிய ஜோர்ஜ்புஷ், சனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி ஆகியோர் மிகுந்த தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருவரது பிரச்சாரத்திலும் ஈராக்பிரச்சினைதான் முக்கிய அங்கம் வகிக்கின்றது.

நேற்று முன்தினம் இரு தலைவர்களும் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாகப் பொதுவிவாதத்தில் கலந்து கொண்டு பேசினார்கள்.

ஈராக்கில்பேரழிவு ஆயுதங்களைக் காணமுடியாத நிலையில் இப்போது சனாதிபதி புஷ், மக்களிடையே ஏமாற்றுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக ஹெரி குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜோர்ஜ் புஷ், ஈராக் மீது இராணுவ நடவடிக்கைக்கு அங்கீகாரம் அளித்த சனநாயகக் கட்சி, பின்னர் ஈராக் மீதான போரை எதிர்ப்பதோடு மட்டுமல்லாது, அந் நாட்டின் மறுசீரமைப்பிற்கு நிதி ஒதுக்குவதற்கு எதிராக வாக்களித்தமை எந்த விதத்தில் நியாயம் என்று கூறியுள்ளார். சதாம் ஹுசைன் ஓர் அச்சுறுத்தல் என்று முன்பு கூறிய ஹெரி இன்று அவரை அதிகாரத்திலிருந்து நீக்கியது தவறு என்று கூறுவது மக்களிடயே குழப்பத்தை ஏற்படுத்தும் என்று புஷ் ஹெரி மீது குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இதேவேளை அமெரிக்க அசோஸியல் செய்தி நிறுவனம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் சனாதிபதித் தேர்தலில் சனநாயகக் கட்சி வேட்பாளருக்கே கூடுதல் ஆதரவு இருப்பதாக கூறியுள்ளது.

# இந்தோனேசிய தூதரகத்தில் குண்டுவெடிப்பு 10 பேர் காயம் ;கட்டடத்திற்கும் சேதம்

(பாரீஸ்)

பிரான்சு நாட்டில் பாரீஸ் நகரிலுள்ள இந்தோனேசியத் தூதரகத்தில் குண்டு வெடித்ததில் 10 பேர் காயமடைந்தனர். தூதரகக் கட்டடத்திற்கு வெளியே இந்தோனேசியக் கொடி மரத்தின் கீழ்வைக்கப்பட்ட குண்டு வெடித்தது. இதனால் யன்னல் கண்ணாடிகள் உடைந்து ஊழியர்கள் மீது வீழ்ந்ததில் 10 பேர் காயமடைந்தனர். தெருவில் நின்ற கார்களும் தெருக்கட்டடங்களில் உள்ள யன்னல்களும் சேதமடைந்தன.பிரான்சு நாட்டு மந்திரி டொமினிக் டி.வில்லேபின் தூதரகத்துக்குச் சென்று குண்டு வெடித்த இடத்தையும் சேதத்தையும் பார்வையிட்டார்.



இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையிலான எல்லைப்பகுதியில் கில்ரன் ரபா கொட்டேலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பையடுத்து தமது நாடுகளிற்கு அவசரமாக விரையும் உல்லாசப் பயணிகள்.

# பொடோ தீவிரவாதிகள் போர் நிறுத்த அறிவிப்பு

அசாமில் தனி பொடோ நாடு அமைக்கப் போராடி வரும் "பொடோ"தீவிரவாதிகளின், தேசிய சனநாயக முன்னணி இயக்கம் மீது தாக்குதல் நடத்த மாட்டோம், அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்று சமீபத்தில் அசாம் மாநில முதல் மந்திரி தருண் கோகாய் அறிவித்திருந்தார்.

அவரது கோரிக்கையை தீவிர வாதிகள் இயக்கம் ஏற்றுள்ளது. இதுகுறித்து அந்த இயக்கத் தலைவர் டி.ஆர்.நப்லா, கொமாண்டர் பி.சுங்கரா ஆகியோர் 'ஆஜ்தக்' டெலிவிஷன் நிறுவனத்துக்கு அனுப்பிய ஈ-மெயிலில் "6 மாதப் போர் நிறுத்தம் செய்யச் சம்மதிக்கிறோம் இந்த நாட்களில் அரசு பாதுகாப்பு படைமீது தாக்குதல் நடத்தமாட்டோம் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒருவர்பலி

அயர்லாந்து கடற்பகுதியில் மின் கசிவினால் தீப்பிடித்துக் கொண்ட கனடா நாட்டு நீர் மூழ்கிக் கப்பலைக் கரைக்குக் கொண்டு வரும் பணிகளில் பிரிட்டன் நாட்டுக் கடற்படையதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த விபத்தில் நீர் மூழ்கிக்கப்பலில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். தீக்காயத்துடன் இருந்த ஏனையவர்கள் உலங்குவானூர்தி மூலம் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

# 5ஆம் ஆண்டுபுலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்கு
# கொடுப்பனவு மறுப்பு கல்வியமைச்சின் துரோகம்!

**–கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க தமிழர் ஆசிரியர்சங்கம் முயற்சி**

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து கடந்த 1996 ஆம்ஆண்டு 5 ஆம்ஆண்டு புலமைப்பிரிசில்பரீட்சையில்சித்தியெய்திய மாணவ்களுக்கு வழங்கப்பெற்று வந்த கொடுப்பனவுகளை இடை நிறுத்தியமை யானது இம்மாவட்ட மாணவச்சிறார்களுக்கு கல்வியமைச்சு இழைத் துள்ள பாரிய துரோகமாகும்.**

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலர் த.மகா சிவத்திடம் பாதிக்கப்பெற்றுள்ள மேற்படி மாணவர்களின் நிலைமை குறித்து வினவிய போது மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் அப்படியான பரீட்சையினை இவ்விருமாவட் டங்களில் கல்வியமைச்சு நடாத்த அனுமதி வழங்கியது ஏன்? என்ற வினாவினையும் எழுப்பினார்.


தொடர்ந்தும் அவர் தெரிவிக் கையில்; இப்படியான ஒரு செயற் பாடு தென்பகுதியில் இடம் பெற் றிருப்பின் அது பாரிய பிரச்சினை யினை உருவாக்கியிருக்கும் என்ப துடன் அதற்கு உடன் தீர்வு காணப் பெற்றிருக்கும்.

இந்த வகையில் போர் மேகம் சூழ்ந்த அந்தக் காலப்பகுதியிலும் பலத்த இன்னல்களுக்கு மத்தியில் பரீட்சைக்குத் தங்களைத் தயார் நிலைப்படுத்தியதுடன் பரீட்சையி லும் சித்தியெய்திய பின்பு அவர்க ளுக்கு வழங்கி வந்த புலமைப் பரீட்சை கொடுப்பனவுகளை இடை நிறுத்தியுள்ளமையானது இந்த மாணவச் செல்வங்களின் உள்ளத் தினை மேலும் மேலும் புண்படுத் திய ஒரு செயலாக அமைந்துள் ளது.

எனவே எமது சங்கத்தினூடாக இம்மாணவர்களுக்கான இடை நிறுத்தப்பெற்றுள்ள புலமைப்பரி சில் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ள உடன் நட வடிக்கை மேற்கொள்ளப்பெறு மென தெரிவித்துள்ளதுடன் கிளி நொச்சி முல்லைத்தீவு மாவட்டங் களிலிருந்து மேற்படி காலப் பகுதி யில் புலமைப்பரீட்சையில் தேர்ச்சி பெற்று, கொடுப்பனவுகள் வழங்கப் பெற்று, கொடுப்பனவுகள் இடை நிறுத்தப் பெற்றுள்ள மாணவ மாணவிகள் தங்களது விபரங் களை அந்தந்த மாவட்ட அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க செயலர்களிடம் பாடசாலை அதிபர் கள் மூலமாக உடன் கையளிக்கும் வண்ணம் இலங்கை தமிழர் ஆசி ரியர் சங்கப் பொதுச்செயலர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (சோ,கு)

## கலந்துரையாடல்

நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பூநகரி பிரதேச செயலர் மா.சிறீஸ்குமார் தலைமையில் பூநகரி அபிவிருத் திப் புனர்வாழ்வுக்கழகம், பூநகரி முழங்காவில் அபிவிருத்திக்கழக தலைவர், இணைப்பாளர்களு டனான கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. (34)



புதுக்குடியிருப்பு-மாத்தளன் வீதியில் துர்க்காவீதி சந்தியில் அமைக்கப்பட்ட போக்கு மூலமான பாலத்தை குப்பைகள் மூடி நீர் செல்லாது உள்ளதை படத்தில் காணலாம். (படம்: தவரட்ணம்)

# கிளிநொச்சி பிரதம அஞ்சல் அலுவலகத்தில் உலக அஞ்சல் தினம் நேற்றுச் சிறப்பிப்பு

(அலுவலக செய்தியாளர்)

உலக அஞ்சல் தினத்தை சிறப்பிக்கும் முகமாக கிளிநொச்சி பிரதம அஞ்சல் அலுவலகத்தில் அஞ்சல் தின நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அதிபர் பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவை நிர்வாக உத்தியோகத்தர் ராம்கி ஏற்றிவைக்க, அஞ்சல் கொடியினை வடமாகாண தபால் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் குமரகுரு ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கினை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணை யாளர் பொன்நித்தியானந்தம், தமிழீழ நிர்வாக சேவை நிர்வாக உத்தியோகத்தர் ராம்கி, வடமாகாண தபால் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் குமரகுரு, வட்டக்கச்சி உபதபாலதிபர் சங்குபரராணி, அக்கராயன் உபதபாலதிபர் ரூபி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து வடமாகாண தபால் திணைக்கள நிர் வாக உத்தியோகத்தர் குமரகுருவிற்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. அவரைக் கௌர விக்கும் முகமாக கிளிநொச்சி தபால் திணைக்களப் பதில் தபாலதிபர் கதிர்காமநாதன், உபதபாலதிபர் கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையினை தபால் சேவகர் நடராசா நிகழ்த்தினார். அடுத்து தலைமையுரையினைத் தொடர்ந்து குமரகுருவின் சேவையைப் பாராட்டி



உப தபாலதிபர் கதிர்காமநாதன், கேதீஸ்வரன், நடராசா, யோகராசா மற்றும் வட்டக்கச்சி உபதபால் அதிபர் சங்குபரராணி ஆகியோர் வாழ்த்துரை தெரிவித்தனர். அடுத்ததாக கவிதை ஒன்றினை உதவித்தபாலதிபர் அன்பரசன் வழங்கினார். தொடர்ந்து கந்தசுவாமி அவர்களுடைய கருத்துரை இடம்பெற் றது. தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த பொன் நித்தியானந்தம் அவர்களின் சிறப்புரை மற்றும் கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை கிளி. மாவட்ட பொறுப்பாளர் இசையமுதன், நிர்வாக சேவையின் நிர்வாக உத்தியோகத்தர் ராம்கி ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள். தொடர்ந்து நன்றியுரையுடன் அஞ்சல் தின நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன. (சோ,கு)

# சிறப்புற நடைபெற்று முடிந்த தேசிய வாசிப்பு மாதம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேச சபை பொதுநூலகத்தால் கடந்த 30 ஆம் திகதி தேசிய வாசிப்பு மாதம் தொடர்பான கருத்தரங்கு புதுக்குடியிருப்பில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் பிரதேசசபை நூலகர் த.சத்தியன் தலைமையில் நடை பெற்றது.

மங்கல விளக்கை முல்லை வலயபிரதிக் கல்விப்பணிப்பாள ரும் பாடசாலை நூலகங்களின் இணைப்பாளருமான பொ.பேரின்ப நாயகம், பிராந்திய உதவி உள்ளூராட்சி உதவி ஆணையாளா வீ.கிருஷ்ணசாமி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார்.

சிறப்பு விருந்தினராக புதுக்குடி யிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தா வருகை தந்திருந்தார். தொடர்ந்து நூலகர் த.சத்தியனின் தலைமையுரையும், சிறப்புரைகளை பொ.பேரின்ப நாயகம் (பிரதிக் கல்விப்பணிப பாளர்) செ.முகுந்தன் (முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர்) ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து துறைசாா. விரிவுரையாளர்கள் கருத்துரை கள் வழங்கினார்கள். படைப்பாளி தமிழ்க்கவி, திருமதி ஆதிலட்சுமி சிவகுமார்,வணபிதா எஸ்.ஈ. றெஜி னோல்ட் அடிகள் (உளவள நிலை யம்) போராளி அருளாளன், பு.சத்தியமூர்த்தி (பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனை) ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த் தினர். இறுதியாக செல்வி. தா.தேவஜ திஜினி (பிரதேசசபை புதுக்குடி யிருப்பு) நன்றியுரை நிகழ்த்தி னார். இந்நிகழ்வில் முல்லை வல யம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தை சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய நூலகர்கள், திணைக்களம் சார்ந்த உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள பங்குகொண்டு சிறப்பித்தனர். (08)

# முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அன்னையர் முன்னணி தெரிவு

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணி நிர்வாகத் தெரிவு அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் சங்கமத்தில் இடம்பெற்றது.

முல்லை மாவட்ட மகளிர்அரசியல் துறைப்பொறுப்பாளர் வேழினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில்,

தலைவியாக துணுக்காய் வலய உதவி கல்விப்பணிப்பாளர் திருமதி. கி.கௌரிபுத்திரியும், செயலாளராக திருமதி. கு.தயாளினியும், பொருளா ளராக திருமதி. கமலநாயகியும் மற்றும் 9 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் . (20)

# வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் சத்துணவுத் திட்டத்தை விரிவாக்க ஏற்பாடு

(திருமலை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் தற்போது அமுலி லுள்ள சத்துணவுத் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவிருப்பதாக மாகா ணக் கல்வி அமைச்சின் செயலா ளர் ஆர். தியாகலிங்கம் தகவல் வெளியிட்டுள்ளார்.

தற்போது இந்தத் திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 19 பிரதேச கல்விப்பிரிவுகளில் 120 பாடசாலைகளில் அமுல்படுத்தப் பட்டு வருகின்றது. இதன் காரண மாக சுமார் 24 ஆயிரம் மாண வர்கள் நன்மை பெற்றுள்ளார்கள். எதிர்காலத்தில் இந்தத் திட்டம் அமுல் படுத்தப்படும் பாடசாலை களின் எண்ணிக்கை மேலும் 19 கல்விப்பிரிவுகளில் அமுல் படுத்தப் பட்டு 508 பாடசாலை மாணவர் களுக்குச் சத்துணவு வழங்கப்பட விருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதன்படி முத லாம் ஆண்டு மாணவர் ஒரு வருக்கு 15 ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கப்படும் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் நன் மையடைவார்கள்.

## பாம்புக்கடிக்கு இலக்கானார்

(அலுவலக செய்தியாளர்)

பாம்புக்கடிக்கு இலக்கான ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவமானது வியாழக்கிழமை இரவு விசுவ மடுப்பகுதியில் இடம் பெற்றுள் ளது. அதேஇடத்தைச் சேர்ந்த சே.இராசையா என்பவரே பாம்புக்கடிக்கு இலக்காகி மேல திக சிகிச்சைக்காக அனுப்பப் பட்டுள்ளார். அண்மைக் காலங் களில் பாம்புக்கடிக்கு இலக்கா னோர் தொகை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



கிளிநொச்சி மற்றும் புதுக்குடியிருப்பில் சர்வதேச ஆசிரியர் தினத்தன்று தமிழர் னர்வாழ்வுக்கழகத்தால் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதை படங்களில் காண்க. (படம்- சோதி, தவரட்ணம்)

# வரட்டுப் பிடிவாதமும் தமிழக அரசும் அதன் எதிர்காலமும்...?

மத்தியரசின் கோபத்திற்கு தமிழக அரசு இலக்காகக் கூடிய சம்பவங்களே தமிழகத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. ஆனால், மத்தியரசு சினம் கொள்வதற்கு நாம் பொறுப்பல்லவே... எனும் நிலையைத் தான் தமிழக அரசு கடைப்பிடித்து வருகின்றது. அந்த வகையில் நெருக்கடிகள் சூழ்ந்துள்ளன என்று நன்கு தெரிந்த பின்னரும்கூட தமிழக அரசு, தனது வரட்டுப் பிடிவாதப் போக்கை தான் நிலைநாட்டுவதற்கு எத்தனிப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த வகையில் பொடோ மறு ஆய்வுக் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதியான சகாரியா தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டுள்ளார். இதற்கு தமிழக அரசே காரணம் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. தமிழக அரசு பொடோ மறு ஆய்வுக் குழுவை அற்பத்தனமாகவே எண்ணியதால்தான் பொடோ மறு ஆய்வுக் குழுவின் உத்தரவுகளை கால் தூசி போன்றே தட்டிவிட்டே வந்துள்ளது.


சகாரியா

இதேவேளை, மத்தியரசு உச்சஸ்தாயி கோபத்தில் இருப்பதாக கூறப்படுகின்றது. தமிழக அரசு, பொடோ மறு ஆய்வுக் குழுவை மதித்துச் செயற்படவில்லை என்பதோடு, அதன் தலைவரான தலைமை நீதிபதி சகாரியா பதவி விலகும் அளவிற்கு காட்டு மிராண்டியாய் நடந்துள்ளது என்பதே அதன் காரணம் என்று நம்பப்படுகின்றது.



CBI இல்லைசார்... CPI கட்சியிலேயி ருந்து தான் யாரோ உங்களைப் பார்க்க வர்றாங்கன்னு சொன்னேன்...!

அதனால்தான், சகாரியாவின் பதவி விலகலையடுத்து, மத்தியரசு அவசர ஆலோசனை நடத்தி வருகின்றது. இதன்படி, மத்தியரசு எடுக்கவுள்ள புதிய முடிவுகள் தமிழக அரசுக்கு நன்மை பயக்கும் என்று நிச்சயம் நம்பமுடியாது. மறுபுறம் அது எத்தகைய தாக்கத்தை தமிழக அரசுக்கு ஏற்படுத்தவுள்ளது என்பதே தமிழக அ.தி.மு.க.வினரிடையே எழுந்துள்ள அச்சத்திற்குரிய வினாவாகும்.

கடந்த பாரதிய ஜனதாவின் தேசிய சனநாயக்கக் கூட்டணியின் ஆட்சியில்தான் பொடோ சட்டம் அவதரித்தது.

பொடோ வழக்குகள் பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் விசாரணைக்குட் படுத்தப்பட்டு வந்தபோதும், அதில் திருப்தி இன்மை நிலவுவதாக பொடோ மறு ஆய்வுக் குழு 2003 ஏப்ரலில் உருவானது.


மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட இந்த மறு ஆய்வுக்குழுவிற்கு தலைமை நீதிபதி சகாரியாவே தலைமை வகித்தார். ஓய்வுபெற்றவர்களான ஐ.ஏ.எஸ். அதிகாரி ரகுமான், ஐ.பி.எஸ். அதிகாரி அரவிந்த் எம். இமாமும் ஏனைய அங்கத்தவர்கள். இவர்கள் வசம் இந்தியா முழுவதுதிலுமாக 217 பொடோ வழக்குகள் விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டன.

இவற்றில் பொடோ மறு ஆய்வுக் குழுவினர் இதுவரை 116 வழக்குகளை மட்டுமே விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். ஏனையவை தொட்டுக்கூட பார்ப்பதற்கு கால அவகாசம் போதவில்லை என்றே அக்குழு காரணம் கூறியிருக்கின்றது.

இதேவேளை வைகோ,பழ நெடுமாறன் நக்கீரன் கோபால் ஆகியோர் மீதான பொடோ வழக்குகளை பொடோ மறு ஆய்வுக் குழுவே விசாரணைக் குட்படுத்தியிருந்தது பழ நெடுமாறன் உள்ளிட்டவர்களை கைது செய்வதற்கு தகுந்த காரணங்கள் இல்லை என்றும் அதுவும் பொடோ சட்டத்தில் கைது செய்வதற்கு வலுவான ஆதாரங்கள் எதனையும் தமிழக காவல்துறையினர் முன் வைக்கவில்லை என்றும் குழுவின் தலைவர் சகாரியா கருத்துக் கூறி அவர்களை விடுதலை செய்திருந்தார்.

இதேபோன்றே வைகோவையும் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு போதுமான ஏதுவான காரணங்கள் இல்லாது இருப்பதால் பூந்தமல்லி பொடோ நீதிமன்றம் வைகோ மீதான வழக்கை திரும்பப் பெறுமாறு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் தமிழக அரசு வழக்கை திரும்பப் பெற்றால் மட்டுமே, பொடோ பூந்தமல்லி நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்ய முடியும் என்று நீதிபதி இராஜேந்திரன் அறிவித்திருந்தார்,




இதனால் தமிழக அரசு வைகோ மீதான பொடோ வழக்கை திரும்பப் பெற வேண்டுமென்று சகாரியா வலியுறுத்தி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் பொடோ வழக்குகளை விசாரணைக்குட் படுத்தும் அதிகாரம் பொடோ மறு ஆய்வுக்குழுவிற்கு இல்லை என்று தமிழக அரசு விதண்டாவாதம் செய்தது.

மேலும் பொடோ மறு ஆய்வுக்குழுவின் உத்தரவுகளை ஏற்க முடியாது என்று எதிர்ப்புக்காட்டி சென்னை ஐக்கோட்டில் வழக்குத் தாக்கல் செய்தது.

ஐக்கோட் பொடோ மறு ஆய்வுக் குழுவின் உத்தரவிற்கு தடையும் விதித்தது. மாறாக தமிழக அரசு ஏற்றுக் கொண்டுதான்ஆக வேண்டுமென்று நிர்ப்பந்தமும் விதித்திருக்கின்றது.

இதனால், ஐக்கோட்டின் உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோட்டிலும் தமிழக அரசு வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றது


ஆக மொத்தம் தமிழக அரசு பொடோ மறு ஆய்வுக் குழுவின் உத்தரவுகளுக் கெதிராக ஐக்கோட், சுப்ரீம் கோட் என்பவற்றில் கூடுதலாக வழக்குகளைத் தாக்கல் செய்ததே தவிர எந்த உத்தரவையும் ஏற்றுக் கொண்டதாகத்தெரியவரவில்லை.

தமிழகஅரசைப் பொறுத்தவரை பொடோ மறு ஆய்வுக்குழுவின் உத்தரவுகள் அனைத்தும் வெறும் செல்லாக்காசு போன்றே இருந்து வந்திருக்கின்றது என்பதே கண்கூடு.

இந்த நிலையில் தான் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பொடோ சட்டத்தை வாபஸ் பெற்றது. அத்துடன் பொடோ வழக்குகளை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணைக்குட்படுத்தி தீர்ப்பளிக்குமாறு உத்தரவிட்டது.

தமிழக அரசோ சகாரியாவின் உத்தரவை ஏற்பதாகத் தெரியவில்லை. மத்தியரசோ வழக்குகளை விரைந்து முடிக்குமாறு காலக்கெடு விதித்து விட்டது. இந்த நிலையில் இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்த சகாரியா மிகவும் வெறுத்துப்போய் இறுதியில் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதே வேளை சிவகாசி ஜெயலட்சுமி வழக்கை மத்திய புலனாய்வு பிரிவினர் (சி.பி.ஐ) விசாரணைக்குட்படுத்துவதற்கு ஐக்கோட் தற்போது அதிரடியாக உத்தர விட்டுள்ளமை தமிழக அரசை உலுக்க ஆரம்பித்திருக்கின்றது.




ஓ.பன்னீர்செல்வம்; தளவாய் சுந்தரம் முதலான தமிழக அமைச்சர்கள் முதல் காவல் துறையில் உயர்பதவி வகிப்பவர்கள் வரை தற்போது கிலியில் இருக்கின்றார்கள்.

ஏனெனில் இவர்கள் அனைவரையுமே சிவகாசி ஜெயலட்சுமி தன்னுடன் பாலியல் ரீதியில் தொடர்பு கொண்டவர்கள் என்று கைவிரல் நீட்டிக்காட்டியிருப்பதே பிரதான காரணம்.

அத்துடன் இவர்களது பதவிகளும் வேட்டு வைக்கப்படும் என்பது அவர்களது கிலிக்கான மற்றோர் காரணம்.

ஜெயலட்சுமியின் வழக்கை தமிழக அரசு விசாரணைக்குட்படுத்தி நடவடிக்கைகள் எடுத்து வரும் இந்த வேளையில் ஐக்கோட் இவ்வாறு உத்தரவிட்டுள்ளதை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

அதனால் தான் ஐக்கோட்டின் உத்தரவை நிறுத்திவைக்க வேண்டுமென்று தமிழக அரசு சுப்ரீம் கோட்டில் மனுத்தாக்கல் செய்தும் எவ்வித பலனும் அளிக்கவில்லை எனலாம்

ஏனெனில் தமிழக அரசின் மனுவை சுப்ரீம் கோட் ஏற்றுக்கொள்ளாததோடு சி.பி.ஐ விசாரணைக்கு தடைவிதிக்க வேண்டிய அவசியமுமே இல்லை என்று கையை விரித்து விட்டது.

சுப்ரீம் கோட் தமக்கு சாதகமாகவே உத்தர விடும் எனும் அதீத நம்பிக்கையில் தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஐதராபாத் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

ஆனால் எல்லாமே தலைகீழாக மாறி விட்டதை அவர் ஐதராபாத்திலிருந்தே அறிய நேர்ந்துள்ளது.

இதனையடுத்து தமிழக உள்துறை செயலர் ஷிலாராணி, உள்துறை அதிகாரிகள், சட்ட வல்லுனர்கள் அனைவரையும் அவசர அவசரமாக அங்கே அழைத்து ஆலோசனை நடத்தியுள்ளார்.



இதன்படி சி.பி.ஐ விசாரணைகளுக்கு முன்பே பன்னீர் செல்வமும், தளவாய் சுந்தரமும் பதவி விலகவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது.

காவல்துறையினர் கண்ணியமானவர்கள், தமிழக காவல் துறையினர் அதிலும் ஓர்படி மேலானவர்கள் என்று வாய் ஓயாது புகழ்பாடியவர் தமிழக முதலமைச்சர். இன்றோ அதே காவல்துறையினர் மீதும் பாலியல் ரீதியான குற்றச்சாட்டுக்கள் வெளிச்சத்திற்கு வந்திருப்பதை எவ்வாறு சமாளிக்கப் போகின்றார்....?

இதேவேளை சிவகாசி ஜெயலட்சுமி வழக்கை மத்தியரசின் புலனாய்வுப்பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதால் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் சட்டப்படி தண்டனை பெறப்போவது உறுதி என்று நம்பப்படுகின்றது. இதுவரை சிவகாசி ஜெயலட்சுமி வழக்கை தமிழக அரசு மேல் பூச்சாகவே விசாரணைக்குட்படுத்தி வந்தமை தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதேவேளை தமிழக தி.மு.க அமைச்சர்கள் ஒன்றிணைந்து தமிழக வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவக்கோரி பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமைக்கு மன்மோகன்சிங்கும் பச்சைக்கொடி காட்டியுள்ளார்.

தமிழக அரசின் நிலை குறித்து சாதகமாக மத்தியரசிடம் எடுத்தியம்ப ஒரு தமிழக அமைச்சர் கூட இல்லை.

**அ.கலைவாணி**

அனைவரும் தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க வினரே என்பதும் தமிழக அரசை பொறுத்த வரை மைனஸ்தான்.

எனவே தற்போது தமிழக அரசு பொடோ வழக்குகளை திரும்பப்பெறாமைக்கு காரணம் சொல்ல வேண்டும்; சிவகாசி ஜெயலட்சுமி விவகாரத்திற்கும் வகை சொல்ல வேண்டும்; இத்தகைய சிக்கல்களால் தமிழக நலன் குறித்தும் செயற்பட முடியாத தள்ளாட்டமான அவல நிலை போன்ற பிரச்சினைகளால் மத்தளம் போன்று அடிபட்டு வருகின்றது.

உண்மையில் தி.மு.க கருணாநிதியின் காய்களின் நகர்விலேயே தற்போதைய தழிழக நிலவரம் இருப்பதாக அவதானிகளின் கருத்து இருக்கின்றது.

எனவே 2006இல் சட்டமன்றத் தேர்தலுக்குள் தமிழக அரசு இன்னும் எத்தனை சோதனைகளை சந்திக்கவுள்ளது...? என்பதோடுஅவற்றைஎப்படிக் கையாளவுள்ளது....? என்பதே இன்றைய தமிழகத்தில் எதிரொலிக்கும் வினாவாகும் என்றால் மிகையில்லை.

# தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில்



## சரித்திர நாயகி எங்கள் மாலதி

**2ஆம் லெப் மாலதி அவர்கள் தொடர்பாக தனது நினைவலைகளை இங்கு பகிர்ந்து கொள்கின்றார் விடுதலைப்புலிகளின் மூத்த பெண் போராளி ரதி அவர்கள்**

**★தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப் மாலதி பற்றிக் கூறுங்கள்?**

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டி வெளியைச் சொந்த இடமாகக் கொண்ட மாலதி தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு சரித்திர நாயகியாக புகழடைந்திருக்கிறார்.

எங்களுடைய மாலதி கலகலப்பானவர். போராளிகளை சோர்வடையாது கலகலப்பாக வைத்திருப்பார். எங்கு சிரிப்பொலிகள் கேட்டு கலகலப்பாக இருக்கிறதோ அங்கெல்லாம் மாலதி நிச்சயமாக நிற்பார். எவருக்கும் உதவ வேண்டும். எவரையும் புண்படுத்தக் கூடாது என்கின்ற உயர்வான சிந்தனை படைத்தவர். மாலதியிடம் எவ்வளவு இரக்கத் தன்மை இருந்ததோ அதே போல் அவரிடம் தற்துணிவும், கொள்கைப் பற்றும் இருந்தது. மாலதி மிகவும் துடிதுடிப்பானவர். எதையும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் மிகுதியாக இருந்தது. அதனால் அவர் என்றும் ஓய்வாக இருந்ததில்லை.

1984ஆம் ஆண்டு இந்தியாவில் நாம் பயிற்சி பெற்றபோது மாலதியும் எம்முடன் தான் பயிற்சி பெற்றார். ஆண் போராளிகளுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகள் தான் எங்களுக்கும் வழங்கப்பட்டன. அவை மிகவும் கடினப்பயிற்சிகள். அந்தப் பயிற்சிகள் அத்தனையையும் சலிப்பின்றி முதலாவதாக செய்து முடிக்கின்றவர்களில் மாலதி முக்கிய மானவர். மாலதி நோய், துன்பம், களைப்பு என்று ஓய்வாக இருந்ததில்லை. ஆனால் போராளிகள் யாராவது நோய்வாய்ப்பட்டால் அந்த இடத்தில் முதலாவதாக நிற்பவர் மாலதி தான். இவரிடம் வஞ்சக எண்ணங்களும் சுயநலத் தன்மையும் என்றுமே இருந்ததில்லை. தேசத்தின் விடுதலைக்காக அயராது உழைப்பதுதான் மாலதியின் ஒரே நோக்கமாக இருந்தது. சாவு பற்றி எப்போதுமே மாலதி சிந்தித்ததில்லை. அவர் துணிவும், உற்சாகமும், வேகமும், துடிப்பும் நிறைந்தவர்.

**★மாலதி அவர்களை போராளியாக உருப்பெற வைத்தமைக்கான காரணம் அல்லது சந்தர்ப்பம் பற்றி உங்களிடம் ஏதாவது பகிர்ந்திருக்கிறாரா? அப்படியானால் அந்தக் காரணம் அல்லது சந்தர்ப்பம் பற்றிக் கூறுங்கள்?**

ஆம், மாலதி தான் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணைந்து கொண்ட காரணம் தன்னை போராடத் தூண்டிய காரணங்கள் பற்றி நாங்கள் இந்தியாவில் பயிற்சி பெறும் காலத்திலேயே கூறியிருந்தார். மாலதி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்வதற்கு முன்னரே விடுதலைப் போராளிகளுக்கு நிறையவே உதவிகளைச் செய்திருக்கிறார். இந்த ஈடுபாடுதான் தன்னை காலப்போக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணையச் செய்தது என்று கூறியிருந்தார். இதற்கு மேலாக மாலதியை மிகவும் அழுத்திய காரணம் தமிழ் மக்கள் அச்சுறுத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும் தொடர்ந்த அந்தக் காலத்தில் எதிரிகளை அழித்து மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக தம்மை வருத்தி உணவின்றி, உறக்கமின்றி காடுகளில் ஒழித்திருந்து பெரும் துன்பத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த போராளிகளைச் சந்தித்து அவர்கள் படும் துயரத்தை அறிந்திருந்ததாகவும் இந்த விடயங்கள் தனது மனதைத் தொட்டிருந்ததாகவும் அதனால் தானும் இவர்களுடன் இணைந்து ஆயுதம் ஏந்தி எதிரிகளை விரட்டி எமது மக்களை அவலவாழ்வில் இருந்து நீக்கவேண்டும் என்ற நோக்கில்தான் விடுதலைப் புலிகளுடன் இணைந்ததாகவும் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

**★ பயிற்சிகள் நிறைவடைந்ததன் பின்னர் போராட்டக் காலங்களில் மாலதி அவர்களின் செயற்பாடு எப்படியிருந்தது? அவர் சாதிக்க நினைத்தவை பற்றிக்கூறுங்கள்?**

எங்களுக்கான பயிற்சிகள் நிறைவடைந்ததன் பின்னர் நாம் அனைவரும் இந்தியாவில் இருந்து மன்னாருக்கு வந்தடைந்தோம். மன்னார் மாவட்டத்தில் தளபதியாக இருந்த விக்ரர் அண்ணாதான் எங்கள் அனைவரையும் பொறுப்பேற்றார். மகளிர் படையணியின் முதல் வாழ்க்கை மன்னாரில் தான் ஆரம்பமாகியது. மன்னார் மாலதியின் சொந்த இடம். அங்குதான் மாலதியின் ஓர்மம் இன்னும் வளர்ச்சியடைந்தது. மாலதியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மாலதி அடிக்கடி கூறுவாள் மகளிர் படையணியின் முதலாவது சண்டை இங்குதான் நடக்கும் .நாங்கள் இங்கு பெரும் சாதனைபடைக்க வேண்டும் என்று அடிக்கடிகூறி அனைவரையும் உற்சாகப் படுத்துவார். மன்னாரின் பலபகுதிகளிலும் நாம் காவல் கடமைகளில் ஈடுபட்டோம் சுழற்சிமுறையில் தான் செற்படுவோம். ஆனால் மாலதி தனக்கு ஓய்வு கிடைத்தாலும் எங்கள் முகாமில் நிற்கமாட்டார் காவல் நிலையங்களுக்குச் சென்றுவிடுவார்.

மாலதி கூறியது போலவே எங்களுக்கு முதலாவது சண்டைவாய்ப்புக் கிடைத்தது. அது மன்னார் அடம்பனில்தான் நடந்தது. விக்ரர் அண்ணாவின் தலைமையில் வெற்றிகரமாக நடந்தது. இது மாலதிக்கு பெரும் மகிழ்வை ஏற்படுத்தியது மாலதி நினைத்தது போல பெண் போராளிகளின் முதற் சண்டை மன்னார் அடம்பனில் நடந்து வரலாற்றில் பதிவானது .

இந்தவரலாற்றுச் சாதனை நிறைவடைந்ததும் அடுத்ததாக முதல் பெண்புலி மாவீரரும் இந்தமன்னார் மாவட்டத்தில் என்று மாலதி அடித்துக் கூறுவார். அது நான் தானோ அல்லது வேறு யாராவது என்றாலும் அது மன்னார் மாவட்டத்தில் தான் என்பார். மன்னார் மாவட்டத்தில் இருந்து நாங்கள் அனைவரும் யாழ்ப்பாணம் சென்று கோட்டைப் பகுதியில் காவல் நிலை களில் நிற்கிறோம் அப்போது கோட்டைக் குள் இருந்து இராணுவம் அடிக்கடி முன்னேறுவதற்கும் எத்தனிக்கும் அவ்வாறு எத்தனிக்கும் இராணுவத்தை நாங்கள் அடித்து மீண்டும் கோட்டைக்குள் கலைப்போம் இதில் மாலதி தனது திறமையையும் துணிவையும் வெளிப்படுத்தி திறம்படச் சண்டை செய்தார். இப்படித்தான் ஒருநாள் நாங்கள் அனைவரும் மாலதியை கோட்டையில் தனியாக விட்டு விட்டு வேறு நடவடிக்கைக்காகச் சென்றுவிட்டோம் அப்போது குறிப்பிட்ட இராணுவம் எமது காவல் நிலையை நோக்கி வந்து கொண்டிருப்பதை மாலதி கண்டுவிட்டார். இப்போது என்ன செய்வது? மாலதி தான் தனியாளாக நிற்கிறேன் என்பதை வெளிப்படுத்தாமல் இடம் மாறி மாறி துப்பாக்கியால் சுடுகிறார். ஆனாலும் இராணுவம் வந்து கொண்டிருக்கிறது. இப்போது மாலதி தான் தனியாக முடிவெடுக்க வேண்டும். எமது பாதுகாப்பிற்காக வெடி மருந்து அடைத்து வைத்திருந்தோம். அதனை வெடிக்க வைத்து இராணுவத்தை மீண்டும் முகாமிற்குள் செல்ல வைத்திருந்தார். இது மாலதியின் சரியான முடிவெடுக்கும் தன்மையை வெளிப்படுத்தியது. மாலதியின் இந்தச் செயற்பாட்டிற்கு அப்போது யாழ். மாவட்ட தளபதியாக இருந்த கிட்டு அண்ணா பாராட்டுத் தெரிவித்திருந்தார். இது மாலதிக்கு இன்னும் உற்சாகத்தைக் கொடுத்தது.

**★மாலதி அவர்களின் போராட்ட காலத்தில் நீங்கள் அவருடன் நெருங்கிப் பழகியவர் என்ற வகையில் மாலதி அவர்கள் தொடர்பாக உங்களால் மறக்க முடியாத சம்பவம் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

மாலதியை நினைக்கும்போது அவளது பல செயல்கள் ஞாபகம் வருகின்றன. அந்த ஞாபகங்கள் அனைத்தும் மாலதியுடன் நான் கோப்பாய் பகுதியில் நிற்கின்றபோது நிகழ்ந்தவைகள் தான். கோப்பாய், கைதடிப் பகுதிகளில் நின்றபோது மாலதி ஒரு இடத்தில் இருக்கமாட்டாள். அந்த வெளிகளின் ஊடாக அங்கும் இங்குமாக நடந்து கொண்டே இருப்பாள். அப்போது கோப்பாய் வெளியில் ஒரு சுடலை இருந்தது. அந்தச் சுடலையில் இரவு வேளைகளில் எல்லாம் நிற்போம். அப்போது மாலதி "சுடலையை காணாத நாங்கள் இப்போது சுடலைப் பேய் மாதிரி நிற்கிறம். சனம் எங்களைக் கண்டால் பேய் எண்டு பயப்பிடப்போகு துகள்" என்று கூறுவாள்.

இப்படித்தான் ஒருநாள் இரவு இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் இறந்து போன ஒருவரின் சடலம் சுடலையில் எரிந்து கொண்டிருந்தது. ஒரு வயது முதிர்ந்தஐயா அதனை சீர்ப்படுத்தி எரித்துக் கொண்டிருந்தார். அப்போது மாலதி என்னையும் கூட்டிக்கொண்டு சுடலைக்குள் போனாள்.

அந்த ஐயா திகைத்துப் போய் "நீங்கள் ஆர் பிள்ளையள்" என்று கேட்டார். அதற்கு மாலதி "ஐயா உங்களை எல்லாம் கஷ்ரப் படுத்திற ஆமிக்காறரை விரட்ட வந்த ஆக்கள் தான் ஐயா நாங்கள்" என்று கூறினாள்.

முதியவர் கேட்டார் "என்ன பிள்ளையள் உங்களுக்கு பயமில்லையோ நான் உங்களப் போல துணிஞ்ச பொம்பிளைப் பிள்ளையளக் காண இல்லை" என்று கூறினார். அதற்கும் மாலதி "அது அந்தக் காலம் இப்ப காலம் மாறிட்டுது" என்று கூறினாள். முதியவர் வியந்து போனார். மாலதி அன்று எந்த இடத்தில் நின்றாளோ அந்த இடத்தில் அவள் உயிர் பிரிந்தது.

மாலதியின் உயிர் பிரிந்த இடத்தில் இப்போது நினைவுத் தூபி அமைக்கப் பட்டிருக்கிறது. மாலதி உயிருடன் இருக்கும்போது எந்த இடத்தில் அவள் உயிர் பிரிந்ததோ அந்த இடத்தில் தான் அவள் வழமையாக அமர்ந்திருப்பாள். நாம் எல்லோரும் அதில்தான் முன்பு கூட்டமாக கூடியிருப்போம். அவள் உயிருடன் நடமாடிய அந்த இடத்தில் அவள் விரும்பிச் சென்று போராளிகளுடன் கூடிக் குதூகலிக்கின்ற அந்த இடத்தில் அவள் உயிர் பிரிந்தது என்றும் மறக்க முடியாது. அந்த நிகழ்வு என்னை ஒவ்வொரு கணமும் வாட்டுகிறது. என் மனதை அழுத்துகிறது.

மாலதியின் சமாதியின் அருகில் உள்ள கல் உடைக்கும் ஆலையில் அவள் பாதம் நித்தம் பதிந்தது. சமாதியின் பின்னால் உள்ள கிணற்றுக்கட்டு எங்கள் மாலதியின் கதை கூறும்.

**★ மாலதி அவர்களின் வீரச்சாவுச் சம்பவம் பற்றி கூறுங்கள்?**

மாலதி வீரச்சாவடைந்த சமயம் நான் அங்கு நிற்கவில்லை. ஆனால், நான் அறிந்த சம்பவம் பற்றி கூறுகிறேன்.

இந்தியப் படையுடன் நாங்கள் சண்டை பிடிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தோம். அன்று தமிழீழத் தேசியத் தலைவர். அவர்கள் பெண் போராளிகளைச் சந்தித்து "நான் இந்தியப் படையுடன் சண்டை பிடிக்கப் போகிறேன். சண்டை பிடிக்கத் தயாரான ஆக்கள் கைஉயர்த்துங்கள்" என்றார்.

உடனேயே மாலதி சொன்னாள் "அண்ணா நான் தயார். நாங்கள் கடைசிவரை உங்கள் தலைமைத்துவத்தில் இருந்து மாறமாட்டோம்" என்று உடனடியாகவே கூறினாள்.

உடனடியாகவே நாம் அனைவரும் அணியணியாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அணி ஒவ்வொரு இடத்துக்கு விடப்பட்டது. அதில் மாலதி எங்கள் அணியில் இருந்து மாற வேண்டி ஏற்பட்டுவிட்டது. பயிற்சி முகாமில் இருந்து ஒன்றாகக் கூடி இருந்து பிரியாத உறவுகள் நாம் அன்று தவிர்க்க முடியாமல் பிரிய வேண்டி ஏற்பட்டுவிட்டது.

எமது பிரிவு மாலதியை வெகுவாகப் பாதித்திருந்தது. அப்போது மாலதி கூறினாள். "உயிருடன் இருந்தால் மீண்டும் சந்திப்போம். ஆனால், நான் இருப்பன் எண்டு மனம் சொல்லேல்ல. ஆனால், நீ இருந்தால் கடைசி வரையும் சண்டையள வடிவாய்ச் செய்" என்று கூறி முடித்தாள். எனக்கு உடல் எல்லாம் ஏதோ செய்தது.

நேர்காணல்
அ.லோகீசன், வீ.பிரதீபன்

எங்களுக்கான வாகனமும் வந்தது. நாங்கள் எமது முதலாவதும் இறுதியுமான பிரிவைச் சந்தித்தோம். வாகனம் மறையும் வரை நான் மாலதிக்கும் மாலதி எனக்குமாகக் கை அசைத்துக் கொண்டே இருந்தோம்.

அன்றைய தினமே சண்டை தொடங்குகிறது. கோப்பாயில் மாலதி தனக்கு வழங்கப்பட்ட வேலையைச் செய்து கொண்டிருந்தாள். அப்போது இந்திய இராணுவத்தை மாலதி எதிர்பாராமல் சந்திக்கிறாள். மோதல் ஆரம்பிக்கிறது. மாலதி காலில் காயப்படுகிறாள். தப்பிக்க முடியாத சூழல். இயன்றளவு முயன்றும் நிலைமை சரிவரவில்லை. சக போராளிகள் மாலதியை காப்பற்ற முயல்கிறார்கள். இயலவில்லை. மாலதி சக போராளிகளிடம் தனது துப்பாக்கியையும் கோல்சறையும் கொண்டுபோய் அண்ணையிடம் கொடுக்குமாறு கூறிவிட்டு சயனைட் குப்பியை கடித்து தோழிகளின் தோழிலேயே மண்ணின் முதல் மகளிர் மாவீரராக அவள் கூறியது போலவே கோப்பாய் மண்ணில் அவள் ஆறுதலாய் அமர்ந்திருக்கின்ற, கூடி இருந்து மகிழ்ந்து குலாவிய அதே இடத்தில் சரித்திரமாகிப் போகிறாள். எங்கள் பெண் புலி 2ஆம் லெப். மாலதி கோப்பாய் மண்ணை முத்தமிட்டபடி.

**★ இவரது வீரச்சாவு பெண் போராளிகள் மத்தியில் எத்தகைய நிலைப்பாட்டை ஏற்படுத்தியது?**

மாலதியின் இழப்பு தமிழீழப் பெண்களுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாலதியின் வாழ்வு இரண்டு ஆண்டுகளுடன் நிறைவடைந்துவிட்டது. அவள் எத்தனையோ சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாள், நிறையவே வரலாறுகளைப் படைக்க வேண்டும் என்று நினைத்தாள் மாலதி இன்னும் இந்த மண்ணில் வாழ்ந்திருந்தால் அவள் செய்திருக்கக் கூடிய சாதனைகள் அளப்பரியன. அந்தளவுக்கு அவளின் ஆற்றல், வலு, வேகம், துடிப்பு அனைத்துமே இருந்தன. ஆனால், அவளை நாம் குறுகிய காலத்தில் இழந்தது தான் பெரும் வேதனை. மாலதி இன்று தமிழ்ப் பெண்கள் அனைவரிலும் வாழ்கிறாள். மாலதியின் வழியில் இன்று தமிழீழப் பெண்கள் புதுவடிவம் பெற்று ஒளியைத் தேடி நகர்கின்றனர்.

# வரலாற்றின் கண்காட்சி—04

பாடசாலைகள். நிறுவனங்களிலிருந்தும்; தனித்தனியாகவும் ஏராளம் மக்களால் கண்காட்சிப் பந்தல்களும், விடியல் படைவீடும் நிறைந்துள்ளது. இன்று நடை பெறவுள்ள இறுதி



நாளின் சிறப்பு நிகழ்வு பற்றிய எதிர்பார்ப்பு எல்லோரிடமும் பரவலாயிருந்தது. நேற்று சனிக்கிழமை என்பதால், கூட்டம் வழமையை விட அதிகமே.

கருத்துக் கொப்பிகள் யாவற்றிலும் கண்காட்சியின் நேரத்தையும் காலத்தையும் நீடிக்கும்படி வேண்டுகோள்கள். சூட்டுப் போட்டிக்கென ஒதுக்கப்பட்டிருந்த ரவைகள் மூன்றாம் நாளே முடிவடைந்துவிட, புதிய ரவைப் பெட்டிகள் தருவிக்கப்பட்டு, போட்டிகள் தொடர்கின்றன. பார்வையாளர்களுக்கான தனி விளையாட்டுக்களான வளையம் எறிதல், குண்டு எறிதல், படை வீரனை குறிபார்த்துத் தாக்குதல் என்பவற்றுக்கான விளையாட்டுத் திடலில் எப்போதுமே கூட்டம் தான்.

மைதானத்தின் வாயிலில் நுழைந்து, விடியல் படைவீட்டு வாயிலால் வெளியேற பெரும் பாலானவர்களுக்கு மூன்று மணித்தியாலயங்களுக்கும் அதிகமாகவே எடுக்கின்றது. இதுவரை காலமும் வெளியே தெரியாத படைக்கலங்கள், களங்களில் விடுதலைப்புலிகளை மேலாண்மை செய்யத்தூண்டும் பலங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் பகுதி பார்வையாளர்களின் அறிவை மேலும் கூர்மையாக்குகின்றன.

போர்க்கருவி உற்பத்தித் தொழிலகத்தில் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே வெட்டல்கள், ஒட்டல்கள், இணைப்புகள் யாவும் முடிக்கப்பட்டு வெடிபொருட்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன.

லெப். கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி அணியினர், தலைவர் அவர்களால் தமது பணிகளை இலகுபடுத்தும் முகமாகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆடைகளை அணிந்தபடி வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த, வெவ்வேறு வகையிலான கண்ணிகளைப் பற்றி, அவற்றின் செயற்பாடுகளைப் பற்றி விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஓயாத அலைகள்-01 நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட முல்லை படைத் தளத்தைச் சூழ சிறிலங்கா இராணுவத்தினர் எவ் விதம்

**கிளி.இல் மகளிர் படையணிகளின்**
**மாபெரும் போரியல் வரலாற்றுக் கண்காட்சி**
**06.10.2004-10.10.2004 வரை**

கண்ணிகளாலேயே காப்பிட்டிருந்தார்கள் என்பதை தளத்தின் மாதிரியமைப்பைக் காட்டி விளக்கி, வியப்புக்குள்ளாக்குகின்றார்கள்.

ஊர்திகளுக்கான தன்னியக்கக் கண்ணியொன்றைக் காட்டிய மிருசுவில் வாசியொருவர், "இதுதான் எங்களுக்குக் கிட்டவுள்ள ஓரிடத்தில் கனகாலமாகக் கிடக்குது" என்றார் அச்சத்துடன். வெடிபொருட்கள் பற்றிய அறிவைக் கண்காட்சியில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருப்பதால், விழிப்பாயிருந்து இடர்களைத் தவிர்க்கும் வாய்ப்பு எம்மக்களுக்குக் கிடைத்துள்ளது. குறிப்பிட்ட மணி நேரத்திற்கு ஒருமுறை கட்டுப்பாட்டுக் கண்ணிவெடியொன்றை 'விடியல் படைவீட்டு' கண்ணிவெடிப் பகுதியினுள் வெடிக்கவைத்தும் காட்டுகின்றார்கள்.

லெப்.கேணல் குட்டிசிறியின் மோட்டார்கள் நேற்றிலிருந்து குறிப்பிட்ட நேரத்துக்கொருமுறை குறிப்பிட்ட தூரத்திற்கு எறிகணைகளை ஏவிக்காட்டிக் கொண்டிருக்கின்றன

விடியல் படைவீட்டின் இன்னுமொரு சிறப்பு-பாதுகாப்பு அகழியொன்றின் மாதிரி வடிவமைப்பு விமானக் குண்டுவீச்சிலிருந்தும் எறிகணை வீச்சிலிருந்தும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவென ஒவ்வொரு குடும்பமும் தனது வீட்டில் அமைக்க வேண்டிய மூடிய பாதுகாப்பு அகழியொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் அளவுகள், அமைப்புமுறை என்பன சிறு மாதிரியுரு ஒன்றின் மூலம் விளக்கப்படுகின்றது. அதன்பின் அந்த நிலக்கீழ் காப்பகழியினுள் நேரடியாகவே நாம் இறங்கிப் பார்க்கின்றபோது தெளிவாக விளங்குகின்றது.

எல்லா வீட்டுக்கும் தேவையான ஒன்று-மிகக் குறைந்த எண்ணிக்கையிலான ஈழத் தமிழினத்தை மேலும் அழியவிடாமல் பாதுகாப்பதற்கென, முதலாம் ஈழப் போர்க்காலத்திலேயே தலைவர் அவர்களின் பணிப்பில் விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு 'விமானக் குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு' என்ற நூலை பதுங்கு அகழி அமைப்பது பற்றிய விளக்கங்களுடன் அச்சிட்டு ,மக்களுக்கு வழங்கியிருந்தமை மிகவும் பயனுள்ளதாயிருந்தது.

போர் இடைநிறுத்தம் எந்த நேரமும் முறிந்து போகக் கூடிய இன்றைய சூழலில், மீளவும் எம்மக்களுக்கு, அவர்களின் பாதுகாப்புக்கான பதுங்கு அகழியைப் பெண் புலிகள் அமைத்துக்காட்டி விளக்கிக்கொண்டிருப்பது மிகவும் பொருத்தமானதே.

இங்கு மிகவும் வியப்பைத் தரும் விடையம் மருத்துவப் பிரிவினரின் பகுதி. வழமையாக செயல்முறை விளக்கங்களோடு நின்ற மருத்துவப் பிரிவினர் சனிக்கிழமை மட்டுமே பார்வையாளருக்கான மருத்துவ சேவைகளையும் (பல் பிடுங்குதல் போன்ற) வழங்குகின்றனர். அதேவேளை திலீபன் மருத்துவமனை தொடர்ச்சியாக மக்களுக்கான மருத்துவ சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இன்னும் உண்டு அவை நாளை வரும்.

# பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் நிரூபிக்கின்றது கண்காட்சி

உலகம் வியக்கும் அளவுக்கு ஒப்பற்ற சாதனைகளை நிகழ்த்தி எழுச்சிபெற்ற பெண்கள் சமுதாயத்தைக் கொண்டு திகழும் தமிழீழ பெண்கள், எழுச்சி நாளையும் 2ஆம் லெப்.மாலதியின் நினைவு நாளையுமொட்டி தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அணியினரின் படைக்கலக் கண்காட்சிநடைபெறுகின்றது.. இக்கண் காட்சியினை மக்கள் அணி யணியாக பல்லாயிரக்கணக்கில திரண்டுவந்து பார்வையிட்டனர்.அத்தோடு தமிழீழ தேசியத்தலைவரின் வழிப்படுத்தலின் பரிணாமவளர்ச்சி பெற்றுத்திகழும் மகளிர் அணிகளின் வளர்ச்சிக் கட்டங்களையும் அவர்களின் சாதனைகளையும் நேரில் பார்த்தனர்.

இவ்வாறு இக்கண்காட்சியினைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த இராஜகோபால் பத்திமா என்பவரை அணுகி கண்காட்சியின் தாற்பரியங்களைப் பற்றி வினாவினோம்.

இக்கண்காட்சியானது உங்களது மனதில் எவ்வாறான உணர்வுகளைத்தோற்றுவிப்பதாக அமைந்தது?எனக் கேட்டபோது

இக்கண்காட்சி சாதனைகளையும், இலக்குகளையும் அடைவதற்கு பால் வேறுபாடு என்பது நிச்சயமாகத் தடையாக இருக்காது. என்பதனைக் காட்டுகிறது. அவ்வாறு தடையாக அமைவது எமது மனங்களில் எழுகின்ற அச்ச உணர்வும், சமுதாயம் பெண்கள் மீது வைத்திருக்கும் அலட்சியத்தன்மையுமே ஆகும்.

ஆனால் இங்கு கனரக ஆயுதங்களை இயக்குகின்ற பெண்களும், ஆயுத தளபாடங் களையும் மற்றும் விசைப்பட குகளையும் உற்பத்தி செய்கின்ற



பெண்களும் வீடுகளில் குடும்பமாக வாழும் போது சமுதாயத் தாக்கங்களால் முடக் கப்பட்டவர்கள். ஆனால் இப்போது எமது தலைவரின் தீர்க்க தரிசனமான வழிகாட்டலும், பெண்அடக்குமுறைக்கெதிரான தீவிர முயற்சியுமே இன்று தமிழ்ப்பெண்களை உலகம் உற்று நோக்கும் நிலைக்கு கொண்டு வந்ததெனலாம். இதைவிட இங்கு இருக்கின்ற ஒவ்வொரு போராளிகளின் செயற்பாடுகளும் தலைவரின் உயரிய நோக்கத்தின் அடைப்படையில் வளர்க் கப்பட்டுள்ளனர் என்பதனையும், அவர்கள் இயக்குகின்ற ஆயுதங் களின் தன்மைகளை வைத்துப் பார்க்கும்போது மனஉறுதியும் தன்னம்பிக்கையும் அவர்கள் மத்தியில் ஆழமாகப் பதியும் அளவுக்கு தலைவரின் வழிகாட்டல் அமைந்துள்ள தென்பதையும் அறிய முடிகின்றது. இங்கு பெண்கள் சமூகத்திற்கு தேவையான சகல விதமான துறைகளிலும் சரியான முறையில் நெறிப்படுத் தப்பட்டவர்களாகச் செயற்படுவதையும். விடுதலைப் போரின் ஆரம்பக்கட்டத்திலிருந்து படிப்படியாக வளர்ந்ததோடு, பெண் அடிமையென்ற பதத்தினையும் விஞ்சி நிற்பதை காண முடிகிறது என உணர்வு பூர்வமாகக் கூறினார்.

தொடர்ந்து பள்ளி முனை மன்னார் சென்லூசியஸ் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி அமிர்தநாதன் சந்தாநாக் என்பவர் இக்கண்காட்சி பற்றி இவ்வாறு கூறுகின்றார்.

நாங்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பதால் தமிழீழ விடுதலைப் போர் பற்றிய முழுமையான விளக்கங்களை அறியக்கூடிய சந்தர்ப்பங்கள் எமக்குக் கிட்டவிலை ஆனால், இந்தக் கண்காட்சியை பார்வையிட்ட பின்புதான் எமக்குப் பெண்களாலும் இவ்வாறெல்லாம் செயற்பட முடியும் என்ற உண்மையை உணர முடிந்தது. இக் கண்காட்சியில் போர்க்கருவிகளைப் பெண்களே உற்பத்தி செய்கின்றனர். அத்தோடு படகுகளைத் தாமே தயாரிக்கின்றனர். விசைப் படகுகளைச் செலுத்து கின்றனர். தமக்குத்தேவையான மருத்துவ தேவைகளைக் கூடத்தாமே பூர்த்தி செய்து கொள்கின்றனர். இதைவிட பெரியதொருபடைத் தளத்தினை எவ்வாறு தாமே அமைத்துக் கொள்வது என்பதையும் அதில் எதிர்த் தாக்குதலுக்கேற்ற நிலைகளை அமைத்துக் கனரக ஆயுதங்களை இயக்கி எதிரியை அழிக்கும் ஆற்றலையும் நாம் நேரடியாகப் பார்க்கும் போது வியப்பாகவே உள்ளது. நாம் எமது பகுதிக்குச் சென்று இது பற்றிக் கூறினால் அங்குள்ள வர்கள் இதனை முழுமையாக நம்ப மாட்டார்கள். ஏனெனில் எவருமே எதிரபா ராத வகையில் தமிழீழ தேசியத் தலைவரினால் பெண சமுதாயம் இந்தளவிற்கு



வளர்க்கப்பட்டுள்ள தென்றால் வியப்புகுக்குரிய தொன்றே. பாடசாலையைப் பொறுத்த வரையில் பெண்களைப் பூவென்றும், கனியென்றும், தளிர் என்றுமே உவமித்துப் படிக்கின்றோம். ஆனால் இங்கு அவையெல்லாம். பொய்த்துப் போனதை நேரடியாகக் காண்கின்றோம். இனிவரும் காலங்களில் பெண்களை வெடிகுண்டுகளாகவும், இரும்புத் துண்டுகளாகவுமே நாங்கள் உவமிக்க வேண்டும் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்கின்றோம் என்றார்.

இதேவேளை இக்கண்காட்சியைப் பார்வையிட்ட இளைஞரும், மடுப்பிரதேச விளையாட்டுத் துறை உத்தியோகத்தருமான செல்லத்துரை சிவனேதரன் என்பவரின் கருத்து இவ்வாறு அமைகிறது.

என்னைப் பொறுத்தவரை ஆயுத உற்பத்தியாளர்களாகவும் கனரக ஆயுதப் பாவனையாளர்களாகவும், படகு கட்டுபவர்களாகவும். திகழ்கின்ற பெண்சமுதாயத்தை இங்குதான் நான் நேரடியாகப் பார்க்கின்றேன். தொழில்நுட்பத்தாலும் மூலப் பொருட்களாலும் நிறையப்பெற்ற நாடுகளிலும் கூட இவ்வாறான செயற்பாடுகளை ஆண்களே செய்து வருகின்றனர். அதற்கான தனியான பயிற்சிகளையும் படிப்புக்களையும் முடித்த பொறியியலாளர்கள் கூட பலசிரமங்களையும், பின்னடைவுகளையும் கண்ட பின்பே இவ்வாறு உற்பத்திகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் இங்கு சாதாரணமாக சமுதாயத்தில் உலாவித் திரிந்த இளம் பெண்கள் பட்டப் படிப்புக்களையும் தொழில் நுட்பரீதியான வளர்ச்சிகளையும் பெற்றிராதவர்கள் சாதாரணமாக எமது கண்முன்னே ஒரு ஆயுதத்தை உற்பத்தி செய்வதைப் பார்க்க வியப்பாகவே உள்ளது. அத்தோடு பாரிய அளவிலான கப்பல்களையும் ஆயுதங்களையும் பெண்களே தனித்து நின்று களத்தில் இயக்குவதை எமக்கு இங்கு கண்முன்னே செயற்படுத்திக் காட்டுகிறார்கள். இவை அனைத்தும் விடுதலைப்புலிகளின் அணிகளுக்குள்ளே வளர்க்கப்பட்டு, இப்போது தான் மக்கள் மத்தியில் வெளிக்கொணரப்பட்டது. தமிழீழ தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனத்தின் வெளிப்பாட்டையே எடுத்துக் காட்டுகிறது. அத்தோடு இவாகள் இந்த அள



விற்கு வளர போரில் பெற்ற அனுபவங்களே உந்து சக்தியாக அமை ந்திருக்கின்ற தென்பதையும் உணரமுடிகிறது எனக் கூறிப் பூரிப்படைந்தார்.



**உ**யர்வுக்கு
ரமூட்டிய
ள்ளங்களுக்கு நன்றி...

2004ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகள் பெற்று எமது அன்பு மகன் **பு.தர்சன்** அவர்கள் சித்தியெய் தியுள்ளார்.

இவரது உயர்விற்கு உரமூட்டும் கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளும்,பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

631/7, கல்மடுநகர்
நி.மு.முள்ளானை,இளவாலை (5165)

திரு. திருமதி
தி. புஸ்பராசா

## நீங்காத நினைவில்...

### லெப்.வனிதன்

நாகரெத்தினம் - வனிதராசா
பிறப்பு:- 25.12.1977
வீரச்சாவு:- 10.10.2000
சொந்தமுகவரி - குச்சவெளி, திருமலை
தற்காலிக முகவரி- 2ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

### கடற்புலி கப்டன் காவலன்

நாகரெத்தினம் - புவனேந்திரராசா
பிறப்பு:- 16.10.1979
வீரச்சாவு:- 02.10.1998
சொந்தமுகவரி - குச்சவெளி, திருமலை
தற்காலிக முகவரி- 2ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (சி-10503)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 * 03 * 1931



விண்ணில் 10 * 09 * 2004

திருமதி. வீரகத்திப்பிள்ளை சின்னம்மா
(வறணி யற்றாளை)

பாலூட்டி தாலாட்டி வளர்த்த எம் தாயே
பாதியினில் எமை விட்டு பிரிந்ததேனோ மாயம்
சூரியனை உம் பெயரால் காண்கின்றோம் நாம் இங்கு
உறவுகளின் ஆறுதலால் தேற்றுகிறோம் எம் மனதை
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.


இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

52, கோணாவில்,
கிளிநொச்சி. (5164)

அன்பு மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் .

## 7 ஆம் ஆண்டு நினைவினில்

எம் இல்லத்தில் 09 ★ 04 ★ 1978



எம் உள்ளத்தில் 10 ★ 10 ★ 1997

### லெப். தமிழவன்

(பிலிப்பையா அலெக்ஸ் கிறேசியன்)

எம் இல்லத்தின் ஒளியாய்
வந்துதித்தவனே!
வாழும் இளவயதில்
எமைப்பிரிந்து
ஒளிரும் மெழுகாய்
இம் மண்ணில் உருகியவனே!
ஆண்டவன் அடி சென்று
ஏழாண்டுகள் மறைந்தும்
உன்நினைவுகள்
என்றும் எம்முன் வாழுமே...

96/1திருவையாறு,
கிளிநொச்சி.

உன்நினைவினில் வாழும்
குடும்பத்தினர். (5155)

## திருவையாறு.ப.வா திட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) கிளிநொச்சி.

அன்புடையீர்!

## வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் 30.10.2004

மேற்படி திருவையாறு ப.வா.திட்டவிவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் 30.10.2004ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு திருவையாறு மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. இ.பொன்னம்பலநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும். எனவே தயவு செய்து இச்சங்கத்தின் (வாக்களிக்கத் தகுதியுடைய) சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் .

குறிப்பு:

1) சங்கத்திற்கான மாதிரி உபவிதியை தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பார்வையிடலாம்.
2) 30.09.2004ல் உள்ளபடியான வாக்களிக்கத்தகுதியுடைய வாக்காளர் பட்டியல்களை சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும், கிளை நிலையங்களிலும் கடமை நேரங்களில் பார்வையிடலாம்.
3) சங்க நலனுடைய பிரேரணைகள் இருப்பின் 23.10.2004ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் என முகவரியிடப்பட்டு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சங்கத்தலைமைச் செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
க.வீரசிங்கம்,
செயலாளர்,
திருவையாறு ப.வா.தி.வி.நு.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(சி-10572)

## கேள்வி அறிவித்தல்

### வலயக்கல்விப்பணிமனை, கிளிநொச்சி.

யுனிசெவ் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்வரும் பாடசாலை வேலைகளை மேற்கொள்வதற்காக தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இக்ராட் எம்-9 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அந்தந்தப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இதற்கான கேள்வி களைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை |
|---|---|---|
| 01. | 110'/20' பாடசாலைக்கட்டடம் நிர்மாணித்தல் கிளி/முட்கொம்பன் அ.த.க.பா. | 1000.00 |
| 02. | 100'/20' பாடசாலைக்கட்டடம் நிர்மாணித்தல் கிளி/யூனியன்குளம் அ.த.க.பா. | 1000.00 |
| 03. | 100'/20' பாடசாலைக்கட்டடம் நிர்மாணித்தல் கிளி/கண்ணகைபுரம் அ.த.க.பா. | 1000.00 |
| 04. | 100'/20' பாடசாலைக்கட்டடம் நிர்மாணித்தல் கிளி/செல்லியாதீவு அ.த.க.பா. | 1000.00 |

குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 13.10.2004 பி.ப.3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 15.10.2004 பி.ப. 3.00 மணிக்கு முன்பதாக தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ, பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விகள் இதே நேரம் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ விரும்பின் சமுகமளிக்கலாம்.

ப.அரியரத்தினம்,
தலைவர்,
கேள்விச்சபை,
வலயக்கல்விப்பணிமனை,
கிளிநொச்சி.

(சி-10262)

-வை.கோ.உள்ளிட்ட 8பேர் மீதான

# பூந்தமல்லி "பொடோ" நீதிமன்ற விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிப்பு

(சென்னை)

**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோ மீது பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்த பொடோ பயங்கர வாதத்தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கிற்கு இந்திய உச்சநீதி மன்றம் தடைஉத்தரவை விதித்துள்ளது.**

வை.கோ மற்றும் எட்டு ம.தி.க வினர் மீதான பொடோ வழக்குகள் தவறாகப் போடப்பட்டிருப்பதாக பொடோ மறு ஆய்வுக் குழு கூறி இருந்த தீர்ப்பின் படி வழக்கு களைத் திரும்பப் பெறுவதாகத் தமிழக அரசு வழக்கறிஞர் ஏற் கனவே கூறி இருந்ததை ஏற்க மறுத்து பூந்தமல்லி பொடோ சிறப்பு நீதிமன்றம் வை.கோ. மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறவேண்டும் எனக் கூறிய தீர்ப்பை எதிர்த்து, வை.கோ. மற்றும் எட்டுப்பேர் உச்சநீதிமன் றத்தில் மேன்முறையீடு செய்த தையடுத்து அதனை விசார ணைக்கு எடுத்த உச்சநீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை விதித் தது.

# அணுவாயுதப் பரவல் தடைச்சட்டத்தில் கையெழுத்திடக்கூடிய நிலை இல்லை

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்

அணுவாயுத பரவல் தடைச் சட்டத்தில் இந்தியா கையெழுத் திடக் கூடிய சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித் தார். அதே நேரத்தில் இந்தியா மிகவும் கட்டுக்கோப்பான அணு வாயுத நாடாகும் என்றார் அவர். இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள ஜேர்மன் பிரதமர் ஜெரார்டு ஷ்ரோடருடனான சந்திப்புக்குப் பிறகு நிருபர்களிடம் வியாழக்கிழமை பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தற்போதுள்ள சூழ்நிலை அணு வாயுதப் பரவல் தடைச் சட்டத்தில் இந்தியா கையெழுத்திடக் கூடி யதாக இல்லை. அதே நேரத்தில் நாங்களாகவே அதற்கான அடிப் படைகளைச் செய்து வருகின் றோம். இந்தியா ஒரு அணுவாயுத நாடுதான். அதே நேரத்தில் பொறுப் புள்ள அணுவாயுத நாடாகும். நாங்கள் சுய கட்டுப்பாட்டுடன் உள் ளோம். முதலில் பயன்படுத்துவோம. என்ற கொள்கை நமக்குக் கிடை யாது. அணுவாயுதங்களை ஏற்று மதி செய்த வரலாறும் நமக்குக் கிடை யாது. அதேபோல் அவற்றை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப் போம்.

அணுவாயுதப் பரவல் தடைச் சட்டத்தில் உள்ள பல்வேறு குறை பாடுகளால் இந்தியா பாதிக்கப் பட்டுள்ளது. ஆனால் அது குறித்து தற்போது பேச வேண்டிய அவசிய மில்லை. இச் சட்டத்தை முறையா கப் பின்பற்ற வேண்டிய வழிமுறை களை ஒத்த கருத்துடைய நாடுக ளுடன் இணைந்து கொண்டு வரு வோம். அணுவாயுதங்கள் தவ றாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், ஒத்த கருத்துடைய நாடுகளுடன் இணைந்து செயலாற்றவும் இந் தியா தயாராக உள்ளது என்றார்.

-கடல் நீரைக் குடி நீராக்கும்-

# 17 ஆயிரம் கோடி திட்டத்தை ரஷ்யாவிற்கு வழங்க 50கோடி ரூபா லஞ்சம் கோரிய தமிழக அமைச்சர்

கடல் நீரைக் குடிநீராக்கும் ரூ.17 ஆயிரம் கோடி திட்டத்திற்கு கேள்விப்பத்திரம் கோரும் போது ரூ.50 கோடி லஞ்சம் கேட்ட அமைச்சரின் பெயரை ஜெயலலிதா விடம் தெரிவித்தோம் என்று உயர் நீதிமன்றில் ரஷ்ய நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது. கடல் நீரைக் குடிநீராக்கும் ரூ.17 ஆயிரம் கோடி திட்டத்தில் கேள்விப்பத்திரம் கோரியதில் முறைகேடு நடந்துள் ளதாகவும், அமைச்சர் ஒருவர் ரூ.50 கோடி லஞ்சம் கேட்டதாகவும், கொடுக்க மறுத்ததால் ரஷ்ய நிறுவனத்திற்கு அவ் ஒப்பந்தம் கிடைக்கவில்லை என்றும் புகார் எழுந்தது. ரஷ்ய நிறுவனம் உயர்நீதிமன்றில் அது தொடர்பாக வழக்குத் தொடுத்தது.

அதை விசாரித்த உயர் நீதி மன்றம் தமிழக அரசின் ஒப்பந் தத்திற்குத் தடை விதித்தது. இந்தத் தடையை நீக்கக் கோரி தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்தது.

இந்த நிலையில் ரஷ்ய நிறுவன விவகாரத்தில் அ.தி.மு.க அமைச்சர் ஒருவர் ரூ.50 கோடி லஞ்சம் கேட்டதால் இவ்விடயத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி தி.மு.க. வக்கீல் கே.முத்துராமலிங்கம் சென்னை உயர்நீதிமன்றில் ஒரு பொதுநலன் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கு தமிழக அரசின் மேன்முறையீடு வழக்கு ஆகிய வற்றின் விசாரணை, நீதிபதிகள் என்.தினகர், இப்ராகிம் கலிபுல்லா ஆகியோர் முன் கடந்த 2 நாட்களாக நடந்தது. இவ் விசாரணையின் போது தமிழக அமைச்சர் தொலைபேசியில் ரஷ்யாவுக்கு தொடர்பு கொண்டு ரூ.50 கோடி லஞ்சம் கேட்ட விவகாரம் குறித்து உரிய ஆதாரத்துடன் 12.09.2003 அன்று தமிழக முதல்வர் ஜெயல லிதாவுக் குப் புகார் கடிதம் கொடுத்த தாக ரஷ்ய நிறுவன வக்கீல் பார்த்த சாரதி தெரிவித்தார். ரஷ்ய நிறுவன முதல்வருக்கு அளித்த கடிதத்தில் லஞ்சம் கேட்ட அமைச்சர் பெயர் பற்றியும் அவர் தொலைபேசியில் பேசிய விபரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளோம் என்றும் வக்கீல் பார்த்தசாரதி கூறினார்.

சிறீலங்கா கடற்படைத் தாக்குதலிலிருந்து தமிழக மீனவரைக் காக்க

# இந்திய அதிநவீன விரைவுக்கப்பல் இராமேஸ்வரத்தில் ரோந்துப்பணி

சிறிலங்கா கடற்படையினரால் தாக்குதலுக்குள்ளாகும் தமிழக மீனவர்களைக் காக்கவும், பாதுகாப்பு அளிக்கவும். இந்தியக் கடற்படையின் அதிநவீன விரைவுக் கப்பல் இராமேஸ்வரத்தில் கடந்த புதன் கிழமை ரோந்துப் பணியை ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

3 மைல் தொலைவு வரையுள்ள படகுகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் நவீன கருவிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. 40 கோடி ரூபா செலவில் வாங்கப்பட்ட இக் கப்பல் மணிக்கு 95 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடியது. அதி நவீன ரக துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

தமது மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லாத வண்ணம் 24 மணி நேரமும் கண் காணிப்புப் பணியில் இது ஈடுபடுவதாக கப்பல் கப்டன் முத்துக் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.




K.T.P.M COMPUTER TRAINING CENTRE

கணனி உலகில் நீங்களும் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பவியலாளராக விரும்பினால் தெரிவு செய்யவேண்டிய ஒரு பாடப் பிரிவு

வவுனியாவில் முதன் முதலாக

A+

Globally Recognized certification For Computer Service Technicians

A+ Certification Courses

Why A+ ?
[Operating System & Net Works]

- உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர் பாடநெறி
- கணனி உலகில் உடனடியான வேலை வாய்ப்பு
- கணனி தொழில்நுட்ப சங்கத்தினால் [Comtia] சர்வதேச ரீதியில் நடாத்தப்படும் பரீட்சை



ஆரம்பம்: 01.11.2004

20 மாணவர்கள் மட்டுமே முதல் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் உங்கள் விண்ணப்பங்களை 20.10.2004இற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

விரிவுரைகள் யாவும் சனி ஞாயிறு நாட்களில் காலை மாலை நேரப் பிரிவுகளாக நடைபெறும்.

(சி-10483)

K.T.P.M Computer Training Centre
No: 29, Temple Road, Kurumankadu, Vavuniya. T.P: 024 -2222521

2ஆம் லெப்ரினன்ட் மாலதி நினைவாக

# மகளிர் கால்பந்து இறுதிப் போட்டி; யாழ்-கிளி. அணிகள் இன்று பலப்பரீட்சை


முல்லை-கிளி அணிகள்


யாழ்-திருமலை அணிகள்

2ஆம் லெப்ரினன்ட் மாலதியின் பதினேழாவது ஆண்டு நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் சிறப்பிக்கும் முகமாக தமிழீழ மகளிர் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று காலை, மாலை என இரு பிரிவு களாக நடைபெற்றன. நேற்றுக் காலை ஆரம்பமான அரையிறுதிப் போட்டியில் திருகோணமலை அணியினை எதிர்த்து யாழ்ப்பாண அணி மோதியது. இதில் யாழ்ப்பாண அணி 10-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை சுவீகரித்துக் கொண்டது.



இப்போட்டிக்கு தீர்ப்பாளர்களாக கலாதரன், பிஜசீலன் செல்வா ஆகியோர் கடமையாற்றினார்கள்.

மாலை இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் முல்லைத்தீவு அணியை எதிர்த்து கிளிநொச்சி அணி மோதியது. இதில் கிளிநொச்சி அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இப் போட்டிக்கு தீர்ப்பாளர்களாக சிவலிங்கம், பிஜசீலன், சிவநேசன் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்றைய இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண அணி-கிளிநொச்சி அணியை எதிர்த்தாடவுள்ளது.

இன்று மாலை 3.00மணிக்கு இப் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப் போட்டியைப் பொறுத்த வரையில் இரு அணிகளும் சமபலம் பொருந்தியவையாக காணப்படுவதால் இன்றைய இறுதிப் போட்டி பரபரப்பானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (தீ,ச,கு)

# மாவீரர் லெப்.கேணல் விக்டர் ஞாபகார்த்தமாக மன்னாரில் மாபெரும் விளையாட்டுப் போட்டி

மாவீரர் லெப்ரினன்ட் கேணல் விக்டர் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று மன்னார் விளையாட்ட ரங்கில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகின.

இப் போட்டிகள் மூன்று நாட்களுக்கு தொடர்ந்து நடை பெற வுள்ளன. இந்நிகழ்வு மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற முதல் கால்பந்து போட்டியில் மன்னார் சவேரியார் தேசியக் கல்லூரி அணியும், பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டு அணியும் மோதின. இதில் பள்ளிமுனை லூசியா அணி 3-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.


அடுத்து நடைபெற்ற போட்டியில் புனித அந்தோனியார் அணி 5-0 என்ற கோல் எண்ணிக்கையில் அல்பேட்டா அணியைத் தோற் கடித்தது. மூன்றாவது போட்டியில் தாள்பாடு அணி விடத்தல்தீவு அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்தது. நான் காவது போட்டியில் எமில் நகர் இருதயநாதர் விளையாட்டு அணி கற்கண்டுபுரம் அணியை 3-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்தது.

இப்போட்டித் தொடரின் ஏனைய போட்டிகள் இன்றும் , நாளையும் நடைபெறவுள்ளன. (மி)

# கராத்தே தெரிவுப் போட்டி

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறை யினால் தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள்ள கராத்தேப் போட்டிக்கான யாழ்மாவட்ட வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் நேற்று முன்தினம் நண்பகல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம் பமாகியுள்ளன. இதில் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (41)

# பாக்டெல் முக்கோண கிரிக்கெட்போட்டி சிறிலங்கா அணிக்கு முதலாவது வெற்றி



பாகிஸ்தான்,சிம்பாப்வே சிறிலங்கா அணிகள் பங்கேற்கும் பாக்டெல் முக்கோண ஒருநாள் போட்டித் தொடரின் 5ஆவது போட்டியில் சிறிலங்கா சிம்பாப்வே அணியை 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்றது.


நேற்று ராவல்பிண்டியில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 33 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து. 104 ஓட்டங்களைப் பெற்றது. மட்சிகென்யரி மட்டுமே 37 ஓட்டங்களைப் பெற்றார். இவ்வணி 50 ஓட்டங்களுக்கு 9 விக்கெடடுகளை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு 105 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா 18.1 ஓவரில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஜெயசூரிய 30பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்றார். உப்புள் சந்தன 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் சிறிலங்கா தனது முதலாவது வெற்றியைப் பெற்றது.




# பெங்களூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி; தோல்வியின் விளிம்பில் இந்தியா





பெங்களூரில் நடைபெற்று வரும் இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான நேற்று இந்திய அணி 105 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் உள்ளது.

முன்னதாக அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இனிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களுடன் நேற்று மேலும் 101 ஓட்டங்களைச் சேர்த்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் இந்திய அணிக்கு 457 ஓட்டம் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

பதிலுக்குத் தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் உள்ளது.





ஆடுகளத்தில் ராவிட் 47 ஓட்டங்களுடனும், பதான் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# இரு தென்னாபிரிக்க வீரர்களுக்கு எதிராக டில்லி பொலிஸ் விசாரணைப் பட்டியல்


போயே


கிப்ஸ்

இரு தென்னாபிரிக்க வீரர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய விசாரணைப்பட்டியல் ஒன்றை டில்லி பொலிசார் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைக்கு அனுப்பியுள்ளது.

2000 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது முன்னாள் அணித்தலைவர் ஹன்சி குரோஞ்சே, பியட் ஸ்ரைடம், ஹெர்ஷல் கிப்ஸ், நிக்கிபோயே ஆகியோர் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் தொடர்பு கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. குரோஞ்சோ விமான விபத்தில் உயிரிழந்தது தெரிந்ததே.

இந்நிலையில் நிக்கிபோயே,கிப்ஸ்ஆகியோர் விசாரணைக்குட்பட வேண்டியவர்களாகவுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளில் உதவியளிக்க தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தயாராக இருப்பதாக சபைத் தலைவர் ஜெரால்ட் மஜோலா தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் விக்கெட் வீழ்த்தியது மகிழ்ச்சி அளிப்பதாய் உள்ளது

## மெக்ராத்



இந்தியாவில் விக்கெட் சாய்த்தது பெரிய மகிழ்ச்சி என்று அவுஸ். வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் கூறியுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றவில்லை. சர்வதேச டெஸ்ட் அரங் கில் தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துள்ள அவுஸ்திரேலிய அணிக்கு இந்த முறை அதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக இருப்பதாக கிரிக்கெட் வல்லுனர்கள் கணித்துள்ளனர். இதற்கு ஏற்றாற் போல் இந்திய நம்பிக்கை நாயகன் டெண்டுல்கர் காயம் காரணமாக அணியில் இடம்பிடிக்கவில்லை. அது மட்டுமன்றி முன்னணி வீரர்களான ராவிட், ஷேவாக், லட்சுமன் ஆகியோர் தொடர்ந்து ஓட்டங்களை எடுக்கப் போராடி வருகிறார்கள்.

பெங்களூரில் நடந்து வரும் முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 246 ஓட்டங்களில் சுருண்டது. இந்தியாவின் இந்தச் சரிவுக்கு வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் முக்கிய காரணமாக அமைந்தீர். ஆட்டத்தின் தொடக்கத்திலேயே இவர் 2 வீரர்களை ஆட்டம் இழக்கச் செய்தார். இந்த ஆட்டத்தில் ராவிட் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். இந்திய மண்ணில் ராவிட் டக் அவுட் ஆனது இதுவே முதல் முறை. மகத்தான இந்த வாய்ப்பைப் பெற்ற மெக்ராத் நிருபர்களிடம் கூறுகையில், மும்பை அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தின் போது என்னுடைய நம்பிக்கை அதிகமானது. இந்திய மண்ணில் விக்கெட் சாய்ப்பது அவ்வளவு சாதாரண விடயம் கிடையாது. இருந்த போதும் ஆட்டத்தின் தொடக்கத்திலேயே இந்திய வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தது நம்பிக்கையின் அளவை அதிகப்படுத்தியது என்றார்.


# சர்வதேச ஹொக்கிப் போட்டி சோகைல் அப்பாஸ் உலக சாதனை



உலகிலேயே அதிக கோல்களை அடித்த வீரர் என்ற பெருமையை பாகிஸ்தானின் சோகைல் அப்பாஸ் பெற்றுள்ளார்.

29வயதாகும் அப்பாஸ் மொத்தம் 268 கோல்களை அடித்து அச் சிறப்பைப் பெற்றுள்ளார். இதற்காக 212 போட்டிகளில் அவர் ஆடியுள்ளார். நெதர்லாந்தின் பால் லிட்ஜென்ஸ் 267 கோல்களை அடித்ததே இதற்கு முன்பு வரை சாதனையாக இருந்து வந்தது.

டில்லியில் நடைபெற்ற இத் தொடரின் 5ஆவது ஆட்டத்தில் அடித்த கோல் மூலம் அச் சாதனையை சமன் செய்தார் அப்பாஸ். ஒரு ஆண்டில் அதிகபட்சமாக 60 கோல்களை அடித்து சாதனை புரிந்துள்ள அப்பாஸ் மிக விரைவாக 100 மற்றும் 200 கோல்களை அடித்த வீரராகவும் திகழ்கிறார்.



### சிந்தனைக்கு

தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## உரிமை மறுப்பு

தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியம் என்பதற்கான விசேட சட்டமூலம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசாங்கம் சமர்பித்த மசோதா சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்திருந்தனர்.

இச்சட்டமூலமானது திட்டவட்டமாகத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைவடையச் செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. அதாவது தமிழ்மக்கள் அதிகப்படியான உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதைத் தடை செய்யும் நோக்கில், கொண்டுவரப்பட்டது என்பதில் சந்தேகப்பட எதுவுமே இல்லை.

எடுத்துக் காட்டாக தமிழ் மக்களின் வவுனியா, திருமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியம் என்ற நிலையில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாக்களிக்கும் தகுதியை இழப்பது தவிர்க்க முடியாத தொன்றாகவே இருக்கும். இந்நிலையில் இம்மாவட்டங்களில் காணப்படும் இனவிகிதாசாரத்திற்கு ஏற்ப வாக்களிப்பவர்களின் இனவிகிதாசாரம் இல்லாது போவதற்கு வாய்ப்புண்டு.

இதன் விளைவானது வவுனியா,திருமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாதிப்படைவதற்கு வாய்ப்புண்டு. குறிப்பாகக் கடந்த தேர்தலில் திருமலை, வவுனியாவில் கிடைக்கப்பெற்றது போன்று முறையே இரண்டு,நான்கு ஆசனங்கள் கிடைக்காது. ஒன்று இரண்டு அல்லது மூன்று ஆசனங்களே கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் வலுவடையும் போது சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளுக்கு குழிபறிக்க முற்படுவதென்பது ஆச்சரியப்படுத்துவதற்குரியதொன்றல்ல. இதற்குக் கடந்த கால வரலாறுகளும் உண்டு.

எடுத்துக்காட்டாக 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி 18 ஆசனங்களைப் பெற்று பிரதான எதிர்க்கட்சியாக வந்தபோது, பொறுத்துக்கொள்ள முடியாத அன்றைய ஆட்சியாளர்கள் (ஜே.ஆர்) அரசியல் யாப்பின் ஆறாவது சீர்திருத்தச் சட்டமூலத்தின் மூலம் கூட்டணியினைப் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற முனைந்தனர். இத்திருத்தச் சட்டமூலமானது பிரிவினைக்கு எதிரான சத்தியப் பிரமாணத்தைக் கோருகின்றது.

இதேசமயம் தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளை மட்டும் தான் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மறுக்கும் வகையில் நடந்துகொள்கின்றனர் என்று இல்லை. தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளையும் மறுக்கும் வகையிலேயே அவர்களின் செயற்பாடுகள் இருந்து வந்துள்ளன. குறிப்பாக 1978 இல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை தற்காலிகமானதென நிறைவேற்றிய சிறிலங்கா அரசாங்கம், கால்நூற்றாண்டுகள் வரையில் அதனை அமுற்படுத்தி வருகின்றது. இச்சட்ட மூலம் மனித உரிமைகளை முற்றாகவே மீறும் ஒன்றாகவுள்ளது.

இந்தவகையிலேயே தற்பொழுது தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் வலுவைக்குறைக்கும் வகையில் வாக்களிப்பிற்குத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்ற சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. இச்சட்டமூலமானது தேர்தலில் மோசடிகள் இடம் பெறாமல் தடுப்பதற்கான வழிவகை என அரசாங்கத்தரப்பு கூறிக்கொள்வது நியாயப்பாடானதொரு காரணமேயாயினும், அதற்காகப் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சனநாயக உரிமைகளை மறுக்கும் வகையில் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றுதல் எத்துணை பொருத்தப்பாடானதாகும்?

மோசடிகளைத் தவிர்ப்பதில் அரசாங்கம் பற்றுறுதிகளைக் கொண்டதாக ஏற்றுக்கொள்ளினும். அதற்கு முன்பாக அனைத்து மக்களினதும் சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொண்டிருத்தல் வேண்டும். அதாவது அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகளை வழங்கியிருத்தல் வேண்டும்.

அதனைவிடுத்து அவசரகோலத்தில் சட்டமூலத்தை நிறைவேற்றுதல் என்பது அரசாங்கத்தின் குறுகிய இனவாத நோக்கத்தையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. ஆனால் தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் சனநாயக உரிமைகளை மறுக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட சட்டமூலங்கள் இறுதியில் பெரும்பான்மையினரையும் பெரும் அவலத்திற்குள்ளாக்கியமையே வரலாறாகும்.

# மீண்டும் வரிசை யுகத்திற்கு அரசு மக்களை அழைத்துச் செல்கின்றது

### - ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு -

(கொழும்பு)

மீண்டும் வரிசை,பங்கீடு, நிவாரணம் யுகத்துக்கு சந்திரிகாவின் கூட்டணி அரசு மக்களை இட்டுச் சென்றுள்ளதாக ஐ.தே. கட்சியின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுவதாவது; கடந்த சில தினங்களுக்கு முன்பு விவசாய அமைச்சரான அநுர பிரியதர்சன யாப்பா நாரகேன்பிட்டியில் வைத்து மக்களுக்கு தேங்காய்களை, ஒன்று 13ரூபா வீதம் வழங்கினார். அதனைப பெரும் பணியாகக் கருதி தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்புச் செய்தனர். இதற்கு சந்திரிகா, ராஜபக்ஷ ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தாலும் பங்கு கொண்டிருப்பர்.

இதேபோன்று வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வரிசையில் வைத்து வழங்கப்பட்டது

பால்மா, உணவுப் பொருட்களும் இவ்வாறே விநியோகம் செய்யப்படுகின்றன.

எனவே முன்பு சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் பாண் வாங்குவதற்கு அதிகாலையில் எழுந்து வரிசையாகச் சென்றது போல தற்போதும் வரிசை முறை அறிமுகப்படுத்தப்படும் அறிகுறி தோன்றியிருப்பதாக அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

# அரச நிர்வாக நடவடிக்கைகள் மந்த கதியிலேயே உள்ளன

### சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

அரச நிர்வாக நடவடிக்கைகள் தற்போது மந்த கதியிலேயே இடம் பெற்று வருவதாக சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். அரச நிர்வாகத் துறையினை செயல்திறன் மிக்கதாக மாற்றியமைக்கும் பொறுப்பு பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலியில் இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

இவ்வாறு நிர்வாகத்தின் நடவடிக்கை மந்தகதியில் இருப்பது நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளோரின் தவறல்ல எனவும் இது வரை காலமும் ஆட்சி செய்த அரசாங்கத்தின் தவறேயெனவும். இதனை செயல்திறன் மிக்கதாகவும், ஊழல்களின்றியும் செயற்படுத்துவதற்குத் தேவையான விடயங்கள் குறித்து ஆழமாகச் சிந்தித்து இந்த விடயங்கள் மேற்கொள்ளப்படவில்லையென்றும் சாதாரண நிர்வாக இயந்திரம் செயற்படும் விதத்திலேயே நிர்வாக மறு சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு அதிகாரம் ஒரு இடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

புதிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டதன் பின்னர் அதனைப் புதிய பிரதமரிடம் தான் கையளித்ததாகவும் இதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலையை மேலும் அதிகரிக்கக் கூட்டுத்தாபனம் கோரல்

நாட்டில் மீண்டும் ஒரு முறை எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க தாம் அரசாங்கத்திடம் மனு செய்திருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் மண்ணெண்ணெயின் விலையை 15 ரூபாவாலும் டீசலின் விலையை 6 ரூபாவாலும் உயர்த்துவதற்குத் தாம் அரசாங்கத்திடம் மனு செய்திருப்பதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. தற்சமயம் மண்ணெண்ணெய் 20 ரூபா நட்டத்திலேயே விநியோகிக்கப்பட்டு வருகிறது. டீசல் 8 ரூபா நட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது எனவே இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் இவற்றின் விலையை அதிகரிக்க உத்தேசித்திருப்பதாகக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. கடந்த 2 மாதகாலத்தில் மாத்திரம் எரிபொருட்களின் விலை மூன்று தடவைகளுக்கு மேல் 10 ரூபாவுக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

# உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து வெளியேறாதோர் மீது வழக்கு

அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலிருந்து இதுவரை வெளியேறாத முன்னாள் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் எச்.டி.பி.நெல்சன் (பொலநறுவை மாவட்டம்), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ.விஜயதுங்க (இரத்தினபுரி மாவட்டம்) ஆகியோருக்கு எதிராக கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை பொது நிர்வாக மறு சீரமைப்பு அமைச்சின் செயலாளர் தாக்கல் செய்துள்ளார். குறிப்பிட்ட பிரதிவாதிகள் பதவியில் இல்லாத போதிலும் தொடர்ந்தும் அரசாங்க உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பயன்படுத்தி வருவதால் இவர்களை வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார். இந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் இரண்டு பிரதிவாதிகளையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது. இதேவேளை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர (கொழும்பு மாவட்டம்), சிட்னி ஜெயரத்ன (பொலநறுவை மாவட்டம்), டி.எம். பண்டாரநாயக்க (குருநாகல் மாவட்டம்), அஜித் குமார பத்தேகம (இரத்தினபுரி மாவட்டம்), நீல் ரூபசிங்க (கம்பஹா மாவட்டம்) ஆகியோருக்கு எதிராகவும் இப்படியான வழக்குகள், தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்கள் அங்கிருந்து வெளியேறியதையடுத்து அந்த வழக்கு நேற்று வாபஸ் பெறப்பட்டது. (32)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும் சாத்தியம்

இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச சந்தையில் மீண்டும் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ள நிலையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளதுடன். ஏற்கனவே பால்மாப் பொருட்களின் விலை அதிகரிப்புத் தொடர்பாக முக்கிய பால்மா உற்பத்தி நிறுவனங்கள் அரசாங்கத்திடம் விண்ணப் பித்துள்ளன.அங்கர் பால்மாவின் விலை ஏற்கனவே அதிகரிக்கப் பட்டுள்ள நிலையில் ஏனைய பால்மாக்களின் விலைகளில் விரைவில் அதிகரிப்பு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலை அதி கரிப்புத் தொடர்பாக சமர்ப்பித் துள்ள விண்ணப்பம் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.கோதுமை மாவின் விலை அதிகரிப்பு செய்யப பட்டால் பாணின் விலை அதிகரிக்கப்படும் என எச்சரிக்கப் பட்டுள்ளது.இருந்த போதிலும் ஒரு இறாத்தல் பாணின் விலையினை 13 ரூபாவாக தொடர்ந்தும் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் சமையல் எரிவாயு வின் விலை அதிகரிப்புத் தொடர் பில் முன்வைக்கப்பட்ட கோரிக் கைகள் தொடர்பில் அரசாங்கம் உரிய பதில் எதனையும் இது வரை வழங்க வில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# புலிகளின் அரசியல் விவகாரக்குழு

# ஆஸ்திரிய பிரதிநிதிகளுடன் சந்திப்பு

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான அரசியல் குழுவினர் நேற்று முன்தினம் ஆஸ்திரியத் தலைநகர் வியட்னாவில், அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான திணைக்களப்பணிப்பாளரும்,சமஸ்டி வெளிவிவகார அமைச்சருமான ஜோர்ஜ் லெங்கைச் சந்தித்துப் பேசியுள்ளனர். இவருடன் சமஷ்டி வெளியுறவு அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



இச் சந்திப்பில் அரசியல் துறைப்பொறுப்பாளருடன் காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன், நீதிநிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியல் துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி சமாதான செயலகத்தைச் சேர்ந்த செல்வி, ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்று இரவு விடுதலைப்புலிகளின் ஆஸ்திரிய வெளிவிவகார அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்ற சமாதானம் குறித்த கருத்தமர்விலும் கலந்துகொண்டனர். இக் கருத்தமர்வு நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

## சமுர்த்தி மகாசங்கக் கூட்டம் இன்று நடைபெற ஏற்பாடு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இரண்டு மாதங்களாக பல்வேறு பிரச்சினைகளால் இடைநிறுத்தப்பட்டிருந்த சமுர்த்தி மகாசங்கக் கூட்டம் இன்று காலை 10.00 மணியளவில் யாழ்.அரசாங்க அதிபர் தலைமையில் சாவகச்சேரி சமுர்த்தி மகாசங்கக் கட்டடத்தில் நடைபெற உள்ளதாகத் தெரியவருகிறது.இப் பிரதேசத்தில் அதிகாரி, வங்கி முகாமையாளர் உட்பட 75இற்கும் மேற்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தரும், மற்றும் 21 அங்கத்தவர்களும் கொண்ட மகாசங்கம் இயங்கி வருவதாகத் தெரியவருகிறது. (28)

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய மாபெரும் கண்காட்சி நாளை

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மாபெரும் கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளது வடக்கு, கிழக்கு மாகாண பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்கள், யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் கண்காட்சி நாளையும், நாளைமறுதினமும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறும். இக்கண்காட்சியினைத் தொடர்ந்து இருநாட்களும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளைப் பார்வையிட அனைவரையும் வருகைதருமாறு நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர் அழைக்கின்றனர்.

### அரசின்...

முன்னணி தீர்மானித்தது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட யோசனையே தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதுஎதிர்வரும் வாரங்களில் .இலங்கைக்கு வருவதாக எதிர்பார்க்கப்படும் நோர்வேயின் சிறப்பு தூதர் எரிக் சூல்ஹெய்மினால் வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### பெண்கள்...

நொச்சி பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சசி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொது ஈகச் சுடரினை லெப்ரினட் மாலதியின் தந்தை பேதுருப்பிள்ளை ஏற்றி வைக்க. தமிழீழ தேசியக் கொடியினை குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி பவநிதி ஏற்றி வைத்தார்.

திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை போர்க்கருவி தொழிலக மகளிர் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வி ஏற்றி வைக்க. மலர் மாலையினை கொள்கை முன்னெடுப்பு மகளிர் பொறுப்பாளர் கிறிஸ்ணா அணிவித்து மலர்வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து அகவணக்க நிகழ்வு முடிவடைந்ததும் போரியல் வரலாற்றை சித்திரிக்கும் கண்காட்சிகளைப் பார்வையிடும் நிகழ்வு ஆரம்பமானது. நண்பகல் 1.00 மணிவரை இடம்பெற்று பின்னர் ஒரு மணி இடைவேளையின் பின்பு மீண்டும் பெருந்திரளான மக்கள் கண்காட்சிகளைப் பார்வையிட்டனர். கண்காட்சியைப் பார்வையிடும் நிகழ்வு இரவு 8.00 மணிக்கு முடிவுற்றது. இரவு கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இதற்கு முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி தலைமை தாங்கினார்.

ஆரம்ப நிகழ்வான மாவீரர் அஞ்சலி நடனத்தையும், அடுத்த நிகழ்வான தேசியத் தலைவர் வாழ்த்து நடனத்தையும் லெப் கேணல் நவம் அறிவுக் கூட கலைஞர்கள் வழங்கினார்கள்.

தலைமையுரையினை அடுத்து நவம் அறிவுக்கூட கலைஞர்களின் நாடகம் இடம்பெற்றது. அடுத்து சிறப்புரையினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களின் நாடகம், அறிவுச்சோலை சிறார்களின் இசைவும் அசைவும் நடன நிகழ்ச்சியினை அடுத்து, கடற்புலிகளின் சிறப்பு சண்டைக்காட்சி இடம்பெற்றது.

இறுதியாக லெப்.கேணல் நவம் அறிவுக்கூடக் கலைஞர்களின் இன்னிசைக் கானங்களுடன் 4ஆம் நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன. இரவு நிகழ்வுகளிற்கும் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு.ச.தீ)

### தேசவிரோத...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த காலயுத்தத்தில் தனது கையை இழந்த, மேற்படி அரசியல்துறைப் போராளி மீது கைத்துப்பாக்கி மற்றும் கிரனைட்டுடன் வந்த இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அச் சமயம் அப் பகுதியால் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் கொலையாளிகளை அடையாளம் கண்டு துரத்திச் சென்ற சமயம் ஒருவர் பதுரியா பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றிற்குள் ஓடிப்போய் ஒளிந்துள்ளார். அந்த நபரை மடக்கிக் கைது செய்ய முற்பட்ட போது மேற்படி நபர் அதிரடிப்படையினர் மீது கைக்குண்டை வீச எத்தனித்த போதே விசேட அதிரடிப்படையினர் கட்டிலுக்கு கீழ் மறைந்திருந்த இவரைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். அப் பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைப்புத் தேடுதலை மேற்கொண்ட போதிலும், இக் கொலையுடன் சம்பந்தப்பட்ட இரண்டாவது நபர் கைது செய்யப்படவில்லை. இவ்வாறான தேச விரோதிகள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் நேரடிக் கண்காணிப்பின் கீழே செயற்பட்டு வருகிறார்கள் என்பதும், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு இவர்கள் பற்றிய தகவல்கள் தெரியவருவதில்லை என்பதும் கடந்த காலச் சம்பவங்களில் இருந்து தெரிய வருகின்றன.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது போராளி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு தேசவிரோத சக்தி யான கருணா அணியே பொறுப்பு என விடுதை புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன் குற்றம் சுமர்த்தியுள்ளார். அக்கரைப்பற்று நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களும், பொதுமக்களும் விசேட அதிரடிப்படையினரால் சோதனையிடப்பட்ட பின்பே நுழைய அனுமதிக்கப் படுகின்றார்கள். அப்படி இருந்தும் இப்படியான சம்பவமொன்று இடம் பெற்றிருக்கிற தென்றால் கொலையாளிகளுக்கு இராணுவத்தின் உதவி இருப்பது தெளிவாகின்றது எனவும் தெரிவித்துள்ளதோடு, இத்தகைய நிலைமை நீடிக்குமானால் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு பாரதூரமான விளைவு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் 5-ஆம் நாள் நிகழ்வுகள்

2 ஆம் லெப். மாலதியின் 17ஆவது ஆண்டு நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் ஐந்தாம் நாளாகிய இன்று இரவு 7.30 இற்கு நுண்கலை மன்ற கலைஞர்களின் மாவீரர் அஞ்சலி நடனத்துடன் ஆரம்பமாகி அம்மன்றக் கலைஞர்களின் தேசியத்தலைவர் வாழ்த்து நடனமும் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி அவர்களின் தலைமையுரையும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களின் சிறப்புரையும் இடம்பெறும். தொடர்ந்து சோதியா படையணியினரின் கலை நிகழ்வும்,இலங்கை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அவர்களின் சிறப்புரையும் மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் சங்கநாதமும், தமிழீழ இசைக்குழுவினரின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ச.கு)

## கிளி. நகரில் வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி

நேற்று கிளிநொச்சி ஏ-9வீதியில் ஏற்பட்ட வீதி விபத்தின் போது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு அவர் பயணித்த மிதி வண்டியும் முற்றாகச் சேதமானது.

நேற்று இரவு 9.00 மணியளவில் ஏ-9 நெடுஞ்சாலையில் கிளிநொச்சிக் காவல் பணிமனைக்கு முன்பாக 'சிறா' எனும் தனியார் நிறுவனத்தினருக்குச் சொந்தமான கன்டர் ரக பாரம் தூக்கி வாகனம், முன்பாக மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞரை மோதியதில் ஸ்தலத்திலேயே அவ் இளைஞர் பலியானார். கடந்த இரண்டு மாத காலமாக பாரிய வீதி விபத்துக்கள் எதுவும் நடைபெறாத போதும்



நேற்று நடைபெற்ற இவ் விபத்தானது வாகன சாரதி குறித்த எல்லையை மீறி அதி வேகத்தில் வாகனத்தைச் செலுத்தியதாலேயே நடைபெற்றது எனவும் குறித்த வாகனத்தை விபத்து நடந்த இடத்திற்கு முன்பாக நூறு மீற்றர் தொலைவில் வைத்து வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் மறித்து எச்சரித்தபோதும், தொடர்ந்து வேகமாகச் சென்றதனாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் சாவடைந்த இளைஞரின் சடலம் அடையாளம் காணப்படாதுள்ளதோடு இவர் பற்றிய விபரங்களும் அறியப்படவில்லை வெள்ளைக் கோடிடப்பட்ட சாரமும் மென் மஞ்சள் மேலங்கியில் 2002 என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து பற்றி தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப்பிரிவுப் பொறுப்பாளர் சிவக்குமார் அவர்கள் தகவல் தருகையில் வீதிப்போக்குவரத்து நடைமுறைகளை மிறீ சாரதிகள் வாகனங்களைச் செலுத்துவதனாலேயே வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே வீதியில் பயணிக்கும் போது போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது குறித்த வேகத்திற்கு அதிகமான வேகத்தில் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள்மீதும் கடுமையான நடவ டிக்கை எடுக்கப்பட ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளதாகக் கூறினார். (ச.கு)

### கோப்பாய்....

ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இன்று மாலை 5.00 மணியளவில் கோப்பாய் கைதடி வீதியில் அமைந்துள்ள மாலதியின் நினைவாலயத்தில் பெதுச் சுடரேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வைத் தொடர்ந்து 2ஆம் லெப். மாலதியின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படம் பாண்ட்வாத்திய இசையுடன் ஊர்வலமாக கோப்பாய் கந்தசுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள சிறப்பு மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பொதுச்சுடரேற்றி தேசியக் கொடியேற்றலுடன் நினைவு நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும். இந் நிகழ்வுகளில் அரச, அரசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்களெனப் பெரும்பாலானோர் கலந்து கொள்ள ஏற்படாகியுள்ள அதேவேளை, வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்டம் பொது மைதானத்தில் நினைவு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளதோடு முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்திலும் நினைவு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33,27,10,08)

### யாழ்....

அவர்களை அவதூறாகப் பேசி அவர்கள் மீது தாக்குதலை நடத்த முற்பட்டுள்ளனர். இதனைக்கண்ட அப்பகுதி மக்களும், வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞர்களும் அங்கு கூடி பொலிசார், இளைஞர்களை தாக்குவதற்கான காரணத்தை விசாரிக்க முற்பட்டதனால் ஆத்திரமடைந்த பொலிசார் அங்கு கூடியவர்கள் மீது தாக்குதலை நடத்த முற்பட்டுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலிசார் மீது பதிலுக்குத் தாக்குதலை நடத்தினர். இதில் இரு பொலிசார் காயமடைந்துள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் வந்து குவிந்த பொலிசாரும் இராணுவத்தினரும் மக்கள் மீது தடியடிப் பிரயோகம், கண்ணீப்புகைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டதுடன் அவ்வீதியால் பயணம் செய்த 15 இற்கும் மேற்பட்டோரைக் கைது செய்து சென்றுள்ளதுடன் அவர்கள் வசமிருந்த துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பலவந்தமாகப் பறிமுதல் செய்தனர்.

அத்துடன் அப்பகுதி எங்கும் ஆயிரக்கணக்கான பொலிசார், மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பு ஏற்படடுள்ளது. இதனால் யாழ்.நகரம் பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களும் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.(33,27)

இப்பத்திரி— கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.